★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26   ஆடி 9   ஜுலை 28   இதழ் 20
யாழ்ப்பாணம்   வெள்ளிக்கிழமை   2384

## யாழ். சமூகசேவையின் (அலங்)கோலம் இது!

[எ. யோகநாதன்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றிய 5 சமூகசேவை உத்தியோகத்தர்கள் வெவ்வேறு காரணங்களுக்காக வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டதால் நேற்று முதல் சமூக சேவை உத்தியோகத்தர் ஒருவர்கூட இல்லாதநிலையில் இப்பகுதி இயங்குகிறது.

யாழ். மாவட்ட சமூகசேவை பகுதியில் 5 சமூகசேவை உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வந்தார்கள்.

5 சமூகசேவை உத்தியோகத்தர்களில் ரி. பாலதேவன் கைதடி வயோதிப இல்லத்துக்குப் பொறுப்பாகச் சென்றுவிட்டார். அடுத்தவர் ஓய்வுபெற்று வேறு வேலை ஒன்றிற்கு சென்று விட்டார். மற்றொருவரான திரு. சிவநேசன் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு

10ம் பக்கம் பார்க்க

★ காத்தான்குடி மக்கள் வங்கிக் கொள்ளையில் புதிய திருப்பம்?

# கொள்ளைக்குதலைமைவகித்தவர் கைதானதாக பொலிசார் தகவல்

## விசாரணையில் 14 பேர்; இருவர் பெண்கள்!

(நமது சிறப்பு நிருபர்)

ஏருவூரில் நிலத்துக்கடியிலிருந்து மீட்கப்பட்ட பத்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், காத்தான்குடி மக்கள்வங்கிக்கொள்ளையில் சம்பந்தப்பட்டவைதான் என்று பொலிஸார் ஓரளவு ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர்.

காத்தான்குடி மக்கள் வங்கிக் கொள்ளை தொடர்பாக இதுவரை கைதுசெய்யப்பட்ட 14 சந்தேகநபர்களில், இருவர் பெண்கள் என்று நேற்று பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

இருபெண்களில் ஒருவர், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிலொருவரின் தாயார் என்றும் இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தேற்றுத் தெரிவித்தன.

மற்றப்பெண் கைதான சந்தேக நபரொருவரின் சகோதரியாகும்.

கைது செய்யப்பட்டவர்களில் இரு பயங்கரவாதிகளும் அடங்குவர் என்றும் இவர்களிலொருவர் காத்தான்குடி மக்கள் வங்கிக் கொள்ளைக்குத் தலைமை தாங்கியவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி மக்கள் வங்கியில் கொள்ளையடிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பத்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை நேற்று முன்தினம் பொலிசார் மீட்டிருந்தனர்.

இந்த நகைகள் ஏருவூர் பொலிஸ்பகுதியிலுள்ள வீடொன்றிலுள்ள வளவில் ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்தபோதே பொலி

(10-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக சந்தியில்

## இளைஞர் சுட்டுக் கொலை!

(கொண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சந்தியில் வைத்து இனம் தெரியாத இளைஞர்களினால் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கொலை செய்யப்பட்டவர் நல்லூர் ஜமுனா வீதியைச் சேர்ந்த இ. செல்லக்கிளி (31 வயது) என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் நடந்தது.

இவர் பல தடவைகள் இயக்கத்தினரால் எச்சரிக்கப்பட்டார் என்றும் இவர் தொடர்ந்தும் பல்வேறு வகையான குற்றச் செயல்களில் ஈடுபட்டுவந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சைக்கிளில் வந்த இளைஞர்கள் இவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு மறைந்து விட்டார்களாம். இச்சம்பவத்தைத் தொடர்ந்து சந்தியில் இருந்த கடைகள் யாவும் உடனடியாகப் பூட்டப்பட்டன.

### இன்று மரணவிசாரணை

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இரத்தினம் செல்லக்கிளியின் சடலத்தை யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் கே. பி எஸ் வரதராசா பார்வையிட்டு மரண விசாரணைக்காக யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

யாழ் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி

(10ம் பக்கம் பார்க்க)

யாழ். அரச அதிபர்

## இடமாற்றத்துக்கு கூட்டணி ஆட்சேபம்

ஜனாதிபதிக்கு தந்தி அனுப்பப்பட்டது

[கொண்டாவில்]

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இடமாற்றம் செய்யப்படுவதை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சேபித்துள்ளது.

தமிழ் மக்கள் தமது பிரச்சனைகளை நேரடியாக அரசாங்க அதிபரிடம் முறையிடக் கூடியதாக இங்கு கடமைக்கு இருந்தநிலை வேறுமொழி பேசுபவர் வரும்பொழுது பல பிரச்சனைகளைக் கிளப்பும் என்று கூட்டணி கருத்து வெளியிட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னுள் எம். பிக்கள் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பட்டணசபை உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோரைக்கொண்ட கூட்டம் திருநெல்வேலியில் சுட்டுத் தலைமையகத்தில் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

(10-ம் பக்கம் பார்க்க)

## "சமூகவிரோதியை நாமே சுட்டுக் கொன்றோம்"

தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகச் சந்தியில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இரத்தினம் செல்லக்கிளி (31 வயது) திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு அண்மையில் சிறையிலிருந்து வெளிவந்தவராம்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் இச் சம்பவத்தின் பின் வெளியிடப்பட்டிருந்த கையெழுத்திலான துண்டுப் பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட செல்லக்கிளி என்னும்சமூகவிரோதி தமிழீழ விடுதலைப் புலிகளால் பரமேஸ்வராச் சந்தியில் வைத்து நேற்றுக் காலை 11 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆங்காங்கே சமூகவிரோதிகளை அழிப்போம். இச்சம்பவத்தைச் செய்தவர்கள் பிரபாகரன் தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாகும்.

"இறந்தவர் சந்திச் சண்டித்தனங்களில் முக்கியபுள்ளி எனக் கருதப்படுபவர்.

செல்லக்கிளியின் சடலம் பரமேஸ்வராச் சந்தியில் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக கிடந்தபின்னர் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறைக்குகொண்டு செல்லப்பட்டது

### மற்றுமொரு பிரசுரம்

"சமூக விரோதிகளை அழிப்போம்" என்ற தலைப்பில் தமி

(10-ம் பக்கம் பார்க்க)

மரக்கூட்டுத்தாபன விவகாரம்:

## கைதான பொறுப்பதிகாரி ரூ.5லட்சம் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

குருநகர் மரக்கூட்டுத்தாபன கிளையில் சுமார் 6 24 620ரூபா சோர்வு ஏற்பட்டதைத் தொடர்ந்து மோசடி குற்றச்சாட்டின்பேரில் கைதான கிளை பொறுப்பதிகாரி ஐந்து லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்

யாழ் மேலதிக நீதவான் திரு. கே. பி. எஸ். வரதராசா முன்னிலையில் சந்தேக நபரான குருநகர் மரக்கூட்டுத்தாபன கிளைப் பொறுப்பதிகாரி சி. சொலமன் பொலிஸ் சார்ஜன்ட் பின்னையினால் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி பி. தவபாலன் ஆஜராகி, இச்சம்பவத்தில் உயர் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரைசம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும், அதனால் சந்தேக நபரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

நீதவான் சந்தேகநபரை 5 லட்சம் ரூபா, காசு அல்லது உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்தார். (ஸ)

## நாட்டின் பல பகுதிகளில் இன்று கடும் மழை!

(கொழும்பு

நாட்டின் பலபகுதிகளிலும் இன்று மழை பெய்யுமென்று கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

கிழக்கு, மத்திய, வடமத்திய பிராந்தியங்களில் இன்று கடும்மழை பெய்யுமென்று தெரிவிக்கப்பட்டது.

[10ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி தெற்கு சிவன் கோவிலடி புதுறோட்டில் மூதற் காணி (வீடு கட்டக்கூடிய 6½ பரப்பு கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: பொ. கார்த்திகேயன், சட்டத்தரணி, ஆடியபாத றோட், திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம். 1078

PL-4 டைமர் வேத் மெஷின் இருவாரத்துக்குள் விற்பனைக்கு கிடைக்கும் உங்கள் தேவைக்கு பின்னவார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1019

சங்கானை-சுன்னாகம் வீதியில் சண்டிலிப்பாய் தபாற்கந்தோருக்கண்மையில் 6பரப்பு காணி வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. திருமதி மாணிக்கம் நாகம்மா, சண்டிலிப்பாய் வடக்கு. 1091

கலர்படங்கள் செய்யக்கூடிய சகல சமான்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சன்கோ கலர் சேவை, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். 1088

### தேவை

எமது ஸ்தாபனத்திற்கு ரேடியோ திருத்துவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. நேரில் வரவும். நரசிங்கம், சன் ரேடியோ சேவிஸ், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. 1086

### பயிற்சி

அரச அங்கீகாரத்துடன் சர்வதேசப் புகழ்வாய்ந்த சான்றிதழுக்குரிய ஒரு மாத கால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J. E. C. 83, பருத்தித்துறைவீதி, (யாழ் புகையிரதக் கடவைக்கருகில்) யாழ்ப்பாணம். 1070

### WANTED

Jaffna Leading Firm requires Middle aged Field Representatives to market popular Office Equipments, Electrical Appliances and Tools, Agricultural Machineries, Motor Cycles, Generators and alike products in Northern Province. Excellent prospects for persons with right apptitude. Security essential. Previous Experience preferred. Apply in own handwriting to 484, Hospital Road, Jaffna. 1088

### பாடசாலை சேவை

கோண்டாவிலில் இருந்தும், உரும்பிராயிலிருந்தும் யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு பிள்ளைகளை ஏற்றிசெல்லும் இரண்டு மினிபஸ்களிலும் இரண்டு நேர, ஒரு நேரப் பாடசாலைகளுக்கும் வெற்றிடம் உண்டு உடன் தொடர்பு கொள்ளவும்.

றட்ணம்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.
1079

## கேள்விப்பத்திர அறிவித்தல்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள மலசலகூடங்கள், கான்கள், சாப்பாட்டு அறைகள், அதன் சுற்றுடல் ஆகியவற்றை துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 1984-03-12ம் திகதி பி.ப. 4-00மணிவரை தொழிற்சாலை விநியோக உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்வதோடு இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோக
உத்தியோகத்தர்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன் துறை,
1984-02-27. 1069

## பூநகரி ம. வி.க்கு திறந்தவெளி அரங்கு

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலயத்திற்கு ஏறக்குறைய 25 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் திறந்த வெளி அரங்கு வேலை முடிவுறும் நிலையில் உள்ளது. இவ்வரங்கை வித்தியாலய உதவி அதிபர் திருமதி சரஸ்வதி சதாசிவம் அவர்கள் தமது சொந்த செலவிலேயே அமைத்துக் கொடுத்துள்ளார். இவ்வரங்கிற்கு கிராம சேவை அலுவலராகவும் பொதுச் சேவையாளராகவும் இருந்து காலம் சென்ற திரு. சதாசிவம் அவர்களின் ஞாபகார்த்தமாக "சதாசிவம் அரங்கு" எனப் பெயர் சூட்டப்படவுள்ளது.

## பங்கீட்டு உணவுப் பொருட்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வாரத்திற்கான சமைத்த உணவு வழங்கப்பட்டது. அதன் பின்னர் பங்கீட்டு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. (ஜெ)

## ரூபா 60, 000 ஒதுக்கீடு

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் இருப்பிடத்தளபாடவசதிக்கென 6 ஆயிரம் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது. அத்துடன் இரண்டு ஜீப் வண்டிகளையும் கச்சேரிப் பாவனைக்கென வழங்கியுள்ளது.

## பிறந்ததின வாழ்த்து

செல்வன் பிரணவன் நந்தீஸ்வரன்

02-03-84



மலேசியாவில் வசிக்கும் நந்தீஸ்வரர் ஜெயரஞ்சனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரணவன் தனது ஏழாவது பிறந்ததினத்தை தெல்லிப்பழை ஒவசியர் ஒழுங்கை இல்லத்தில் இன்று கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, தம்பி, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் சிறுடனும், சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

1100

## மீண்டும் நடைபெறுகிறது

தெளிவான
போட்டோஸ்ரட் பிரதிகளுக்கு

# பாரத் சென்ரர்

178, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
போன்: 24265

(1084)

## அந்தியேஷ்டி அழைப்பு

சித்தவைத்திய கலாநிதி அவர்களின் மனைவி
திருமதி அகுபதி சின்னத்தம்பி



அன்னைமடியில்
9-3-1917
அரனடியில்
1-2-1984

அந்தியேட்டிக்கிரியைகள் 2-3-84 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கீரிமலையில் நடைபெறும். அன்று நண்பகல் 12மணியளவில் சபிண்டிகரணக் கிரியைகள் அன்னாரது வீட்டிலும் நடைபெறும்.

கணவன், மக்கள்,
மருமக்கள்.

"பதி இல்லம்", சக்திவாசா, பனை, தெல்லிப்பழை. 1097

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## 4-3-84 முதல் மீண்டும் சேவையில்

கூட்டுறவு வைத்தியசாலை

வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்,
கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Again in Service from 4-3-1984
Co - op Hospital
Consultent Centre
Kandy Road, Chundukuli, Jaffna.

4-3-84 முதல் கூட்டுறவு வைத்தியசாலை சேவையை மீண்டும் ஆரம்பித்திருக்கிறது.

- விசேட வைத்திய நிபுணர் ஆலோசனை, சேவை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன
- எல்லாவித சத்திர சிகிச்சை வசதிகள்
- பிரசவ வசதிகள்
- கண், காது, மூக்கு, தொண்டை, பிரசவசம், சிறுபிள்ளை, பல், தோல், மனநோய் வைத்திய வசதிகள்.
- சகல வசதிகளுமுடைய தங்குமறைகள்
- குறைந்த செலவில் வைத்திய சேவை
- 24 மணிநேர - இரவு பகல் சேவை

உங்கள் சேவையே எம் ஒரே நோக்கு!!!

யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
127, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். 1089

# YARL HALL

MAIN STREET, JAFFNA.

## A/L 84 PAPER CLASSES

ஆரம்பம் 6-3-84 செவ். காலை

| | | |
|---|---|---|
| தாவரவியல் | — | திரு. சிவவீரசிங்கம் |
| விலங்கியல் | — | திரு. தங்கராஜா |
| தூயகணிதம் | — | திரு. கமலசிங்கம் |
| பிரயோககணிதம் | — | திரு. கமலசிங்கம் |
| பௌதிகம் | — | திரு. கலாபரன் |
| இரசாயனம் | — | திரு. மனோகரன் |

மேற்கூறிய ஆசிரியர்களால்
A/L 86ம் ஆண்டுவகுப்பும் ஆரம்பமாகியுள்ளது.
1098

## Diploma in Management

(TAMIL AND ENGLISH)

(முகாமைக் கற்கை நெறி)

க. பொ. த. (சாதாரணம்) மூன்று திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் அல்லது

க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்திபெற்றவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

கணக்காய்வு, முகாமை, வரிக் கணிப்பீடு ஆகிய துறைகளில் பூரண பயிற்சியளித்தல்

1-வது பிரிவு ஆரம்பம் 5-3-84

## Diploma in Electrical Engineering

க. பொ. த. (சாதாரணம்) விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3-வது பிரிவு ஆரம்பம் 5-3-1984

யாழ். நகரில் எமது நிறுவனத்தில் மட்டுமே இப்பயிற்சிநெறி நடைபெறுகின்றது.

## Hotel Management

க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இப்பயிற்சி நெறிக்குத் தோற்றலாம்.

## Telex (சர்வதேச தொலைதொடர்பு)

க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இப்பயிற்சி நெறிக்குத் தோற்றலாம்.

விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி.
தொழிற்கல்விச் சேவைகள் பிரிவு
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

### மணிவாக்கு

ஒரு கொள்கைக்காக ஒரு மனிதன் தன் உயிரை அர்ப்பணிக்கிறுனென்பதனுல் மட்டும் அந்தக்கொள்கை உண்மையானதெனக் கருதலாகாது.

— ஒஸ்கார் வைல்ட்

# நமதுநோக்கு

## மக்கள் விஞ்ஞானம்

கோடிக்கணக்கான மக்கள் பட்டினியில் வாழும்போது தூய விஞ்ஞான ஆராய்ச்சியில் பெருந்தொகை பணத்தையும் நேரத்தையும் செலவு செய்வது நியாயமா? என்ற கேள்வி இன்று நோபல் பரிசுபெற்ற டாக்டர் சந்திரசேகருக்கு விடுக்கப்பட்டது.

'மனிதன் உண்டு உடுத்து மகிழ்ச்சி கொள்வது திருப்தியாகாது விஞ்ஞானஆராய்ச்சியால் அடையும் விளைவுகள் காலகதியில் சமுதாய முன்னேற்றத்துக்கு முக்கியமானவை' என்று பதிலளித்தார் விஞ்ஞான மாமேதை சந்திரசேகர்

இந்த உலகப்புகழ்பெற்ற மேதாவி ஒருதமிழன்; தமிழ்நாட்டு மொழி கலை கலாசாரத்தில் ஊறியவர். அது மட்டுமல்ல, அவருடைய குடும்பத்தில் விஞ்ஞானம் குலவித்தையென்பதற்கு அவருடைய சிறிய தந்தையார் நோபல் புகழ்பெற்ற சேர். சி. வி. ராமன் நல்ல உதாரணம்.

பிரிட்டனின் F. R. S. பட்டம் (Fellow of the Royal Society) மேதைகளின் மிகப்பெரும் கௌரவம்; இந்தியாவில் மிகச் சிலரே இதனைப் பெற்றிருக்கின்றனர்; சிறிய தகப்பனும் பெருமகனும் இதனைப் பெற்றனரென்றுல் இந்தக் குடும்பத்தின் சிறப்பும் தமிழரின் ஆதாரக்கல்வி கண்ட அற்புதமும் ஓரளவிற்குப் புலப்படும்.

டாக்டர் சந்திரசேகர் இளைஞராகவேஇந்தியாவை விட்டு இங்கிலாந்து, அமெரிக்கா செல்ல வேண்டிய வசதி கிடைத்ததால் இன்று உலகின் மிகப்பெரும் விஞ்ஞான மேதைகளில் ஒருவராக வளர்ச்சியடைந்திருக்கிறார்.

நாடு, மதம் மொழி கலாசாரம் தானும் விஞ்ஞான உச்சியில் எவ்வித பாகுபாட்டையும் அனுமதிப்பதில்லை. தூயவிஞ்ஞானம் உலகை ஒன்றுபடுத்தும் சக்தி மனிதன் அதனைத் துர்ப்பிரயோகம் செய்கிறுன்.

மண்ணுலக விண்ணுலக அமைப்புகளின் அடிப்படை உண்மையை ஆராயும்பணியில் விஞ்ஞானிகள் ஒன்றுபட்ட குடும்பம் என்ற கருத்தை வற்புறுத்திவருகிறுர் டாக்டர் சந்திரசேகர்.

சிறிய தந்தையார் சேர். சி. வி. ராமன் ஒளியின் ஒரு அற்புத விளைவு (Raman Effect) கண்டு பிடித்ததற்கு நோபல் பரிசு பெற்றுர். டாக்டர் சந்திரசேகர் நட்சத்திரங்களின் அழிவில்ஏற்படும் அமைப்பு- சூரியன் அளவு பருந்த கும்பம்- (Chandrasekhar Mass Limit என்ற கோட்பாட்டின் தந்தையெனச் சென்ற ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. விஞ்ஞான நூல்களில் இதுஇடம் பெற்றுவிட்டது

டாக்டர் சந்திரசேகரின் படிப்பறையில் வெள்ளைச் சுவரில் தூங்கும் மூன்று படங்கள்- அல்பேட் ஐன்ஸ்டைன், ஐசாக் நியூட்டன், இந்திய கணித மாமேதை ராமாநுஜன் ஆகிய மும்மூர்த்திகளுமே!

வெள்ளை மாளிகையில் ஜனுதிபதி லிண்டன் ஜோன்சன் அளித்த உயர் அமெரிக்க விருது வைபத்தில். இம்மூப்பெரும் விஞ்ஞானிகளுக்கு சரிநிகர் சமானமானவரே சந்திரசேகரென்று புகழ்மாலை சூட்டினர்

சேர் பி. சி. ராய், ஜகதீஸ் சந்திரபோஸ், சேர். ஸி வி ராமன், ராமாநுஜன், டாக்டர் சந்திரசேகர் போன்ற உத்தமர்கள் இந்திய மண்ணில் விளைந்து வளர்ந்த விஞ்ஞானப் பயிர்கள்; இவற்றில் தமிழுக்கும் இந்து கலாசாரத்துக்கும் தக்க பின்னணி உண்டு.

மாமேதைகளாக, உலகின் விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவ மேனுட்டுப் பயிற்சியும் பரிசோதனை வசதிகளும் அவர்களுக்கு அத்தியாவசியமாயின, கிடைத்தன.

இந்த வளர்ச்சிக்கு ஆதாரமானவை: விஞ்ஞானக் கல்வி; விஞ்ஞானப் பயிற்சி, தொழில் நுட்ப திறமைகள்; அவைக்கேற்ற சிந்தனைத் திறன் சொந்த மண்ணில் தளைத்துவளராவிடின் விஞ்ஞானத்தால் உலகம் முன்னேறுவது விபரீதக் கருத்தாகிவிடும்.

இன்று உலகில் எந்தநாட்டிலும் கட்டுப்பாடற்ற இளைஞர்களிடம் விஞ்ஞான பிரயோகத்தால் உற்பத்தி செய்யப்படும் அழிவுக் கருவிகள் சட்டைப் பாக்கெட்டிலேயே காணமுடிகிறது

எனவே விஞ்ஞானம் தெரிவிக்கும் தெய்வீக உண்மைகளில் மாணவர் பயிற்சி பெறுவது வீட்டிலேயே ஆரம்பமாக வேண்டும். வீட்டிலும் பாடசாலையிலும் சூழலிலும் வாழ்க்கையை மேம்படுத்தும் விஞ்ஞான கருத்துக்கள், எங்கள் அன்றுட வாழ்க்கையை சொகுசாகவோ, ஆடம்பரமாகவோ ஆக்குவதில் மேன்மையில்லை சிந்தனை ஆற்றலுடைய சமூகத்துக்கு உதவும் நற்பிரஜைகளே நோக்கம்.

கல்வி மூலம், தொழில் மூலம் வேலைவாய்ப்பளிக்கும் உற்பத்தி, வறுமையை நீக்கவல்ல உணவு உற்பத்தி அதன் நேர்மையான விநியோகம்—இவ்வித வாழ்வுக்கு ஆதாரமான தேவைகள்; அதற்கப்பால் ஆத்மீக உணர்வுக்குரிய விசாரணைகள் யாவும் காரணகாரிய ரீதியில் பயிலும் ஆற்றல் தாய்மொழிக்குரித்தான செல்வமே என்கிமானவின் முடிந்த முடிவு

மக்கள் சமுதாயத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த வல்ல விஞ்ஞான அறிவு மக்கள் பேசும் மொழியில் உயர்ச்சியடைந்தாலொழிய அது ஒரு தனிப்பட்ட கூட்டத்தினரின் ஏகபோக உரிமையாய் விடும்; அதற்குரித்தான மண்ணில் அது வளர்ச்சியடையாது.

இந்த வகையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆற்றிவரும் பாரிய பணி எங்கள் நேற்றைய பத்திரிகையில் 'குறுகிய காலத்தில் நீண்ட பயணம்' என்ற செய்தித் தலைப்பில் மிகப் பிரபலமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

இவ்வித துணிச்சலான தொண்டுகளை தமிழ் மக்களுக்கு மகாகவி பாரதியார் இந்நூற்றுண்டின் தொடக்கத்திலேயே பணித்திருந்தார்.

சின்ன தீவுக்குப் பாலம் அமைப்பதிலும் இன்று அதிகம் தேவையானது இவ்வித தேசிய கல்வித் திட்டம்; தஞ்சாவூரைப் பின்பற்ற பல தமிழ் பல்கலைக் கழகங்கள் முன்வருமென நம்புகின்றோம்

தமிழுக்குரிய இந்த அடிப்படை ஆற்றலையும், அதன் வளர்ச்சியின்மையால் தமிழறிஞர்களின் பங்களிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் உத்வேகமற்ற நிலையையும் கவனத்திற் கொள்வது யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் இன்றைய அவசிய பொறுப்பு.

விவசாயம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், வர்த்தகம் சமுதாயத்தின் பின்தங்கிய போக்கை மாற்றுவதற்கு உதவ வேண்டும். இன்றேல் இன்றைய வெள்ளமும் வறட்சியும் விதியின் சதியென்ற தத்துவம் நிலைக்கும்.

## வடக்கில் ஒரு முகாம் மட்டுமே மூடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பண்ணை அகதிகள் முகாம்மட்டுமே மூடப்பட்டது என்றும், மற்றும் முகாம்களில் அகதிகள் இருந்துவருகின்றுர்கள் என்றும் யாழ். சமூக சேவை அதிபர் திரு. அமிர்தாகரன் தெரிவித்தார்.

குருநகர் முகாமிலும், பின் பகுதியிலுள்ள மேல்மாடிக் கட்டிடத்தில் 15 அகதிகள் குடும்பங்கள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

கைதடி முகாமில் கூடுதலான குடும்பங்கள் இருப்பதாகவும், நிவாரணப் பணம் பெற்றவர்கள் வேறிடங்களுக்குச் சென்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அகதிகள் நிவாரணப் பணம் பெற்று, முகாமைவிட்டுச் சென்று கொண்டிருப்பதாகவும் அவர் கூறினுர். [ஈ]

## கைதடி முகாம் அகதிகளை குடியேற்ற நடவடிக்கை!

(மட்டுவில்)

தென்மராட்சி அகதிகள்புனர்வாழ் வாழ்வுக்குழு கைதடி அகதிகள் முகாமிலுள்ள அகதிகளை, கெற்பெலியில் குடியேற்றி புனர்வாழ்வளிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

கைதடியிலும் சுமார் 25 குடும்பங்களுக்கு காணி கிடைக்குமென நம்பிக்கை கொண்டுள்ளது.

கெற்பெலியில் சுமார் 100 பரப்பு காணியை கொள்வனவு செய்து அகதிகளைக் குடியேற்றும்.

யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ள அகதிகளுக்கு கைதடியில் சுமார் 25 குடும்பங்களுக்கு தலா சுமார் 2 பரப்பு காணி வீதம் கொடுக்க அரசு சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது

கைதடி அகதிகள் முகாமிலுள்ள பல குடும்பங்கள், தமது பழைய இடங்களுக்குத் திரும்பிச் சென்றுள்ளன. இல குடும்பம் இந்தியா திரும்பி உள்ளன. ஒரு குறைந்த தொகையான குடும்பங்களே இப்பொழுது முகாமில் உள்ளன.

இந்த அகதிகளையும் கைதடியிலும், கெற்பெலியிலும் குடியேற்றுவது சம்பந்தமாக அரசு அனுமதி பெற யாழ். அரசாங்க அதிபர் விரைவில் கொழும்பு செல்வார். [சு]

## வெள்ளிச் சிந்தனை

### திருப்பணி

காரைநகர் சிவன்கோவிலில் திருப்பணி செய்த பல தொண்டர்களில் ஒருவரின் செயல் திருப்பணி செய்யமுற்படுவாருக்கு முன்மாதிரியாக உள்ளது

ஒவ்வொரு வீடுதோறும் சென்று பாதந்தோறும் பணமும் பொருளும் திரட்டி திருப்பணி செய்த பெரியார் ஒருவரை ''இவர்திருப்பணி என்று சொல்லிச்சொல்லி வயிறு வளர்க்கின்றுர்'' என யாரோ சொல்லிவிட்டார் அதைக் கேள்வியுற்ற அப்பெரியார் தன் கூறையைக் கூறியவர்களை வெறுக்கவுமில்லை. தான் திருப்பணி செய்வதை விடவுமில்லை அன்றிலிருந்து சுவையான உணவு உண்பதை நிறுத்திவிட்டார். காட்டிலே கிடைக்கும், உணவுக்குப் பயன்படும். இலைவகைகளை எடுத்து உப்பு இல்லாமலே அவித்து உண்ணும் நியதியுடன் தனது திருப்பணியைத் தொடர்ந்தார் என்பர்.

ஆலயங்களில் திருப்பணி செய்ய முற்படுவோர் ஒவ்வொருவரும் தான் எனது என்னும் ஆணவத்தின் குணங்களை விட்டு தமக்குவரும் அவமானம், கஷ்டம் என்பனவைகளை பொருட்படுத்தாமல் எப்படித் திருப்பணிசெய்ய வேண்டும் என்பதை இப்பெரியாரின் வரலாறுதமக்குப் போதிக்கின்றது.

ஆலயங்களில் திருப்பணி செய்வோர் அத்திருப்பணி காரணமாக தற்பெருமை கொள்வது மட்டுமன்றிப் பலர் தம் விருப்பப்படியே அவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் அருளவேண்டும் என்றும் ஆசைப்படுகின்றனர்.

சிலர் இறைவனிடத்திலுள்ள அன்புகாரணமாகத் திருப்பணி செய்யாமல் தம்முடைய செல்வாக்கையும் செயற்திறனையும் பகிரங்கப் படுத்துவதற்காகத் திருப்பணி செய்கின்றனர்.

தன்பிள்ளைக்கு வேண்டிய நலன்களைத்தான் செய்வது மட்டுமன்றி, அப்பிள்ளையின் வாழ்வு மேம்பட வழிகாட்டுகின்ற- முன்மாதிரியாக இருக்கின்ற -கல்விகற்பிக்கின்ற அனைவரிடத்தும் அன்பாயிருக்கும் தந்தைபோன்று, தான் திருப்பணி செய்யும் ஆலயத்தில் திருப்பணிசெய்ய மகிழ்பவரே பெறற்கரிய மனிதப்பிறவியைப் பெற்றுத் தானமும் தவமும் தாமே செய்கின்ற அருஞ்செயலுக்குரிய சிறப்பினராவர்.

ஒருசிலந்தியின் வாய்நூலால் சிவபெருமானுக்குப் பந்தல் அமைத்த புண்ணியத்தால் சோழப்பேரரசனுகி பின்னும் பல திருப்பணிகள் செய்து, தேவர்களும் வணங்கத்தக்க நாயன்மாரில் ஒருவரானது என்ற வரலாற்றை மறவாது சிவார்ப்பணமாக நான் எனதென்றும் அற்றுத் திருப்பணிகளைச் செய்ய வேண்டும்.

''நலந்திகழ் வாயின் நூலால்
சருகிலைப் பந்தர் செய்து
சிலந்தியை அரசதாள
அருளினுய் என்று திண்ணம்
கலந்துடன் வந்து நின்தாள்
கருதி நான் காண்பதாக
அலந்தனன் ஆலவாயில்
அப்பனே அருள்செய்யாயே.
— திருநாவுக்கரசர்

— அருளாளன்

## சரித்திரப் பின்னணிகொண்ட பெரிய பிள்ளையார்

பருத்தித்துறைத் துறைமுகத்திற்கருகாமையில் நகரின் மத்தியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளுடன் கோயில்கொண்டெழுந்தருளியிருந்து அடியார்களுக்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கும் கொட்டடிச் சித்திவிநாயகப் பெருமான் தேற்றுத் தேரேறி வீதிவலம் வந்து அருள்பாலித்தார். பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றனர். இன்று தீர்த்தமாடுகின்றனர்.

வானளாவிய அழகிய கம்பீரமான தோற்றத்தையுடைய இராஜகோபுரத்துடன் இன்று காட்சியளித்துக்கொண்டிருக்கும் பருத்தித்துறை விநாயகப் பெருமான் ஆலயம் 350 வருடங்களுக்கு முற்பட்ட சரித்திரப் பழமை பெற்றது. இப்பகுதியிலே முதன் முதலிலே தோன்றிய ஆலயமும், பெரிய விசாலமான வீதிகளையுடைய ஆலயமுமானபடியினுலேயே இவ்வாலயத்திற்குப் ''பெரிய பிள்ளையார் கோவில்'' என்ற பெயரும் ஏற்பட்டது.

அக்காலத்தில் பருத்தித்துறைமுகத்திற்கு வேலைக்குச் செல்வோர் இவ்வாலயத்திலிருந்து கேணியில் ஸ்நானம்செய்து விநாயகப் பெருமானை வழிபட்டு அவரின் அருள்பெற்ற பின்னரே வேலைக்குச் சென்று வேலையை மேற்கொள்வது வழக்கம்.

இலங்கைக்கு ஒல்லாந்தர் வந்து ஆட்சிசெய்தபோது அவர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்காகச் சைவசமய வழிபாட்டிற்கு இடமளிக்க

(4-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளருக்கு 5 ஆயிரம் ரூபா

சிறந்த பத்திரிகையாளருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுக்கத் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகம் முன்வந்திருக்கிறது

கடந்த 3 ஆண்டில் 1981, 82, 83 ல் தமிழ்பத்திரிகையில் வெளிவந்த செய்தி அறிக்கையை எழுதியவருக்கு இத்தப்பரிசு கொடுக்கப்படும். செய்தியின் பின்னணிபற்றிய கட்டுரை, புலன்ஆய்வுச்செய்தி (இன் வெஸ்டிகேட்டிங் ரிப்போர்ட்) ஆகியவையும் பரிசுக்குரியவை நாளிதழ், வார, மாத இதழ்களில் வெளியான செய்திக் கட்டுரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். உள்ளூர் பத்திரிகைகளில் உள்ளூர் பிரச்னைகள் பற்றி அலசி ஆராய்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளும் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவிலுள்ள தமிழ் பத்திரிகையாளர்களும் இந்தப் பரிசுக்கு உரியவர்கள். பத்திரிகையாளர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் இத்தகைய கட்டுரைகளை, செய்திகளைப் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கலாம். முடிவு திகதி மார்ச் 31 அனுப்பவேண்டிய முகவரி:- துணைவேந்தர், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தகவல்: கணேஷ்

## மலர் கண்டேன்

ஈழநாடு ஏட்டின் வெள்ளி விழாவை முன்னிட்டு 56 பக்கங்களுடன் வெளிவந்த ஈழநாடு 25வது ஆண்டு நிறைவு மலர் பார்த்தேன். ஒரு மலருக்கு இயற்கையில் ஒருமணம் தான் அமைந்திருக்கும். ஆனால் ஈழநாடு வெள்ளி விழா மலரில் ஒவ்வொரு இதழும் ஒவ்வொரு விதமான நறுமணம் கொண்டவை அமைந்து களிப்பூட்டுகின்றது.

இந்த மலர் ஈழநாட்டின் 25 வருட கால சாதனையின் சரித்திரப் புத்தகம் என்றால் அது மிகையாகாது.

வெள்ளிவிழா மலரை வெளிக்கொணர உழைத்த ஆசிரியர் குழாத்துக்கும் நிர்வாகத்துக்கும் எனது உளம் நிறைந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் என்றென்றும் உரித்தாகுக.

ச. முருகையா

திருக்கேதீஸ்வரம்.

ஃ ஃ

ஈழநாடு - எங்கள் ஈழநாடு 25 வருடங்களைக்கடந்து ராஜ நடை போடுகின்ற அழகைப் பார்த்து... இதய அரங்கம் பெருமை கொள்கிறது. பாராட்ட வார்த்தைகள் இன்றி ததும்பி நிற்கிறது. ''எங்கள் அருமை ஈழநாடே! பாராட்ட வார்த்தைகளின்றி பரவசத்தில் நாம் நிற்கும் நிலை உனக்குப் புரிகிறதா! போதும் அது!''

கூடுதலாக பக்கங்களை அலங்கரிப்பது கட்டுரைகளே; அறிவிற்கு விருந்தானது. பேராசிரியரின் கட்டுரை சிறப்பு வாய்ந்தது. ஈழநாட்டின் ஆரம்பத்தையும் - நகலையும் - இன்றைய நிலையையும் பக்குவமாக அளவிட்டுப் பார்ப்பது ஈழநாட்டின் இன்றைய உன்னத நிலையை எழுதியதைப் படித்ததும் உவகையில் நாம் எவ்வளவு உயரத்தில் பறந்தோம் என்பதை எழுத்தில் தர எனக்குத் தெரியவில்லை.

கொழும்புத் தமிழ் ஏடுகளோடு - ஈழநாட்டை ஒப்பிட்டுப் பேசியவர்கள் கூட ''தமிழ் மக்களின் ஒரே குரல் ஈழநாடுதான். தமிழ்மக்களின் பிரச்சினை நியாயமான தீர்வோடு எடுத்தியம்புகின்ற தைரியம் 'ஈழநாடு' ஒன்றிற்குத்தான் உண்டு...'' என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்பதைக் காணும்போது சந்தோஷம் தாங்கவில்லை. வெள்ளி விழா மலர் அதே எண்ணிக்கையளவு ஒற்றைகளைத் தாங்கி பயனுள்ள ஆக்கங்களோடு வெளிவந்திருப்பது மிகச்சிறப்பானதே! தேர்ந்த கதைகளின் சுவையும் தனிதான்.

வெள்ளிவிழா கொண்டாடி முடிந்து ராஜநடை போடும் எங்கள் 'ஈழநாடு' இன்னும் சிறப்பாய் பெரும்பணி புரிந்து பெருமைகள் பெற வாழ்த்துகின்றேன்.

தாங்க முடியாத சோதனைகளைச் சந்தித்தும் தளர்ந்து போகாது தலைநிமிர்ந்து நின்று ஈழநாட்டை தலைநிறக்க வைத்த 'ஈழநாடு' இல்லத்தினர் அனைவருக்கும் 'நன்றி' சொல்ல சொல்லிற்கு எங்கே போவது? தொடரட்டும் அவர்களின் அயராத பணி.

- தமிழ்ப்பிரியா

## கிராமங்களின் அவல நிலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தென்னியன் குளம் எனப்படும் குடியேற்றத்திட்டத்தில் ஏறக்குறைய 150 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்கிராமம் துணுக்காயில் இருந்து 7 மைல் தொலைவில் போக்குவரத்து வசதியும் அற்றதாக அமைந்துள்ளது ஆரம்பத்தில் 300 குடும்பங்கள் வரையில் வாழ்ந்த இக்கிராமத்தில் ஒரு சில குடும்பங்களின் பயங்கரவாத நடவடிக்கைகளால் நாளாந்தம் இக்குடியேற்றத்திட்டத்தில் ஆட்கள் குறைந்து கொண்டு போகின்றார்கள். இவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து பொலிசாரிடம் பல முறை கிராமவாசிகள் புகார் செய்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவர்கள் சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்து மக்களையும் அரசாங்க அதிகாரிகளையும் பயமுறுத்தி காரியங்கள் சாதிக்கிறார்கள். இக்கிராமத்தின் அவலநிலையைப்போக்க மக்களும் குடியேற்றவாசிகளும் என்ன செய்வது என்று அறியாது திகைத்து நிற்கின்றார்கள்.

இக்கிராமத்தில் நடக்கும் இச்சம்பவங்கள் பற்றி இரகசியமாக அதிகாரிகள்மக்களிடமும் அரசாங்க அதிகாரிகளிடமும் ஆராய்ந்து இக்கிராமத்துக்கு வாழ்வளிக்க வேண்டும். இல்லையாயின் இக்கிராம மக்கள் தங்களின் குடியிருப்புக்களை விட்டு விலகவேண்டிய நிலைமை ஏற்படும் என்பதில்சந்தேகமில்லை.

அரசாங்கம் இவர்கள் பற்றி நடவடிக்கை எடுக்காவிடில் ஏதாவது முற்போக்கு இயக்கங்களாவது இம்மக்களைக் காப்பாற்றவேண்டும் என கிராம வாசிகள் எதிர்பார்க்கிறார்கள்.

(நலம்விரும்பி)

## மக்கள் கருத்து

## இரஞ்சித்தின் குடும்பம்

சென்ற 28-02-1984 ஈழமுரசு இதழில் ''கலவரத்தில் கால்களை இழந்து வாழ வழி தேடுகிறார்'' என்னும் தலைப்பிலான திரு. அ. இரஞ்சித்தின் சந்திப்பு பற்றிய செய்தி வெளியிட்டிருந்தீர்கள். உண்மையிலேயே மனித உள்ளம் படைத்த எவனும் இரஞ்சித் உடைய வாழ்க்கையை நினைத்து வருந்தாமல் இருக்க மாட்டான். இதுபோன்று எத்தனையோ குடும்பங்கள் அல்லல்படுகின்றனர். இப்படியானவர்களை சமூகத்தில் முன் நிறுத்தி அவர்களுக்கு வழி தேடிக் கொடுக்கும் பணியை ''ஈழநாடு'' தொடரவேண்டுமென்பது நமது அவா.

இரஞ்சித் குடும்பமே ஈனர்கள் உங்களது வாழ்க்கைக்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்தினாலும் நீங்கள் கலங்காது வாழ்ந்திடுங்கள் எங்கள் எல்லோருக்கும் சுபீட்சம் நிறைந்த எதிர்கால வாழ்க்கை கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. உடல் ஊனமுற்றாலும் மனத்தைரியம் இருந்துவிட்டால் உண்மையிலேயே அவர்கள் ஊனமானவர்கள் அல்ல நீங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியிருக்கும் நியாயமான கோரிக்கை வெற்றியளிக்கும்.

செஞ்சிலுவைச் சங்கத்தவர்களே உங்கள் சமூகப்பணி உலகம் அறிந்ததே. உங்களிடம் இரஞ்சித் குடும்பம் கேட்டிருக்கும் உதவியை நீங்கள் செய்வீர்களென்றே நம்புகின்றோம்''

செல்வன்
சி. சந்திரமோகன்.
தென்மட்டுவில்.

## புதுமடம் உடுவில்தெற்கு சித்திவிநாயகர் மகா கும்பாபிஷேகம்

புண்ணிய பூமியாகிய மானிப்பாய் புதுமடம் பகுதியில் கோவில்கொண்டு இருக்கும் ஸ்ரீசித்தி விநாயகர் பெருமான் இற்றைக்கு 175 வருடங்களுக்குமுன் அரசமரத்தடியில் வந்து அமர்ந்தார் என்று அங்குள்ள முதியோர் கூறுகிறார்கள்.

அரசமரத்தடியில் அமர்ந்த பெருமானுக்கு அவ்வூர் மக்கள் மடாலயம் அமைத்துவழிபட்டு வந்தனர். காலக்கிரமத்தில் மக்களின் பெரும் முயற்சியால் 1933ம் ஆண்டு கோவில்கட்டி கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாலயத்தில் உப விழாக்கள் ஆகிய நவராத்திரி மானம்பூ, திருவெம்பாவை ஆகிய மார்கழி விழாவும் சதுர்த்தி தினங்களும் நடைபெற்று வந்தன. காலக்கிரமத்தில் பூசகர் சின்னவி வங்கி சகோதரன் ஆறுமுகத்திற்கும் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணத்தாலும் பூசகர் வங்கிக்கு நோய்வாய்ப்பட்ட காரணத்தாலும் பூசை வழிபாடுகள் நெறிகெட்டன. ஆலயம் பாழ் அடைந்தது. கிராமமக்களுக்கு எவ்வளவோ இன்னல்கள் நேர்ந்தன. மக்கள் துன்பம் அடைந்தனர். இதனை உணர்ந்த கிராம மக்கள் 1975ம் ஆண்டில் ஆலய உரிமையாளர் ஆகிய ஆறுமுகம் செந்தில்நாயகத்திடம் ஒரு தூதுக்குழுவை அனுப்பினர். ஆலயத்தை புனரமைப்புச் செய்துவழிபட ஒரு புனரமைப்புச்சபையைஏற்படுத்துவதற்கு சம்மதம்தெரிவித்த உரிமையாளர் பின்பு மறுக்கவே இம்முயற்சி கைவிடப்பட்டது. இதன்பின் இவ்வூர் சைவமக்களால் 19-5-82 இல் ஸ்ரீசித்தி விநாயகர் இந்து மாமன்ற உதயமாகியது. வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபருக்குச் செய்துகொண்ட முறைப்பாடு காரணமாக 15-3-83 விசாரணை நடைபெற்று சமாதானமாகத் தீர்க்கப்பட்டது. விசாரணையில் நடுவர்களாகக் கலந்துகொண்ட வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் திரு செ இலகுநாதன் இணுவில் சமாதான சபைத் தலைவர் திரு. சண்முகலிங்கம் ஆகியோர் கூறிய கருத்தை ஆதரித்து வலி. தெற்கு உ. அ. அதிபர் முன்னிலையில் திரு. ஆ. செந்தில்நாயகம் தலைமையில் தர்மகர்த்தா சபை தெரிவாகி, இச்சபையோரால் இவ்வூர் மக்களிடம் இருந்து நிதி திரட்டப்பட்டு, ஆலயம் திருத்தப்பட்டது. சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இருந்து புதிய விநாயகர் சிலை எடுத்துவரப்பட்டு, திரு. கு. சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியார்களின் உதவியுடன், ருத்ரோற்காரி வருஷம் தைமாதம் 23ம்திகதி(6-2.84) பூர்வபக்ஷ சதுர்த்தி திதியும் மீன லக்கினத்தில் புதிய விநாயகருக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து மண்டலாபிஷேகம் 11 நாட்கள் நடைபெற்று 12ம் நாள் சங்காபிஷேகத்துடன் எம்பெருமான் கிராம ஊர்வலத்துடனும், அன்னதானத்துடனும்சங்காபிஷேக விழா நிறைவேறியது.

தர்மகர்த்தாசபை
செயலாளர்

நா. பொன்னுத்துரை

## மற்றவர்களும் பின்பற்றட்டும்

''ஈழநாடு'' பத்திரிகை கையில் கிடைத்ததும் மாணவர்கள் தொடக்கம் முதறிஞர்கள் வரைக்கும் உயர்திரு நா. மாணிக்க இடைக்காடர் அவர்களின் அனுபவ, கருத்துள்ள, சிறந்த பல கட்டுரைகளை படிப்பதற்கு ஆவலுடன் புரட்டுவதை தற்பொழுது காணக் கூடியதாக இருக்கிறது, அவரின் பகைதங்களை கவனிக்கும் போது அவரின் வாழ்க்கை முறைகளை மேலும் மேலும் அறிய ஆவலாக இருக்கிறது சகல துறைகளிலும் உள்ள உயர்பதவிகள் வகித்தவர்களின் செயல்முறைகளை குறிப்பாக எடுத்துகூறி பல உண்மைகளை வெளிப்படுத்திவருகின்றார்.

இப்படியாக தமிழ் அறிஞர்கள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், தொழிலதிபர்கள், நீதியரசர்கள், அரசியல் அறிஞர்கள் (அரசியல் வாதிகள் அல்ல) முதலானவர்கள் தங்களது அநுபவ உண்மைகளை சிறப்பாக எடுத்துக்கூறி எதிர்கால சந்ததிக்கு நல்லவழிகளை நெறிப்படுத்த வேண்டும் என்பது வாசகர்களின் பெருவிருப்பமாகும்.

ஜீ. சிதம்பரநாதன்
சங்கரத்தை.

## சரித்திரப்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விலை. சைவக் கோவில்களை அழித்தார்கள். அதுபோலவே பருத்தித்துறையில் கோயில் கொண்டிருந்த விநாயகர் ஆலயத்தையும் ஒல்லாந்தர் அழித்தார்கள். இதனால் இங்கு வாழ்ந்துவந்த சைவ மக்கள் பெருந்துயரடைந்தார்கள். இன்னல்களையும் பொறுக்கமுடியாமல் இம்மக்கள் இந்தியாவிலிருந்து விநாயகர் விக்கிரகமொன்றைக் கொண்டுவர முயற்சித்தார்கள்.


அக்காலத்தில் இந்தியாவிலிருந்து பருத்தித்துறைத் துறைமுகத்தினூடு சோறி நெல் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட சொரி நெல்லினுள் விநாயகர் விக்கிரகமொன்றை மறைத்துக் களவாகக் கொண்டுவந்து சேர்த்தி சைவ மக்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

இங்கு கொண்டுவரப்பட்ட விநாயகர் விக்கிரகத்தை இந்தியாவிற்கு ஏற்றுமதிசெய்யும் பனங்கட்டிக் கொட்டுக்குள் வைத்துப் பிரதிஷ்டை செய்து வணங்கிவந்தார்கள். இவ்வாறு பனங்கட்டிக் கொட்டுக்குள் வைத்து வணங்கப்பட்டு வந்தமையினாலேயே ''கொட்டுப் பிள்ளையார்'' என்னும் பெயர் வழங்கப்பட்டது.

இலங்கையில் வேறெந்த ஆலயத்திலும் காண முடியாத அமைப்போடு ஆலயத் தெப்பக்குளம் அமைந்திருப்பது இவ்வாலயத்தின் தனிப் பெருஞ்சிறப்பாகும். இத் தெப்பக் குளத்திலே தெப்பத் திருவிழா அதிசிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆலய பரிபாலன சபைத் தலைவராக திரு. க. இராசநாதனும், இணைச் செயலாளர்களாக சட்டத்தரணி த. கிருஷ்ணராசாவும், க. தங்கவேலாயுதசுவாமியும், பொருளாளராக திரு. அ. நாகரத்தினமும் சிறப்பாகச் செயல்படுகின்றனர்.

கடந்த 22ம் திகதி சித்தி விநாயகரின் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று எம்பெருமான் தீர்த்தமாடுகின்றார் 4ம் திகதி தெப்பக் குளத்திலே தெப்பத் திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது

ஹில்




''அதி உன்ன

ஹில்டன் இன்டர்
முன் எப்போதும் கண்
ஜப்பானின் அதி
கட்டிட நிபுணர்கள் உ
எழுப்பப்படும்: கொழு
யான சர்வதேச ஹொ
மனதைக் கவரும்
கொண்டிருக்கும்: வ
க்கும் விசேஷ வசதிக
வசதிகளுக்குத் துணை
கோட்டையில் வாகன

Hil

# றில்டன் இன்டர்நெஷனல் கொழும்பு.
## ஆரம்பம் 1986.



## உலகில் வேறெவரையும் விட அதிக
## ி உன்னத ஹொட்டேல்களை" வழங்கியோரின் நிர்மாணம்...

ஹில்டன் இன்டர்நெஷனல் கொழும்பு, உண்மையில், நம் நாடு முன் எப்போதும் கண்டிராத அதி உன்னத ஹொட்டேலாகத் திகழும்.

ஜப்பானின் அதி புகழ் பெற்ற யோசோ ஷிபாட்டா என்னும் கட்டிட நிபுணர்கள் உருவமைத்த அது, எச்சிலன் சதுக்கத்தில் எழுப்பப்படும்: கொழும்பில் நெடுங்காலம் தேவைப்பட்ட உண்மையான சர்வதேச ஹொட்டேலாக அது அமையும்.

மனதைக் கவரும் விசாலமான பல்வேறு வசதிகளை அது கொண்டிருக்கும்: வருகை தரும் பிற நாட்டுத் தலைவர்களை உபசரிக்கும் விசேஷ வசதிகள், நம் நகரத்தின் சர்வதேச மகாநாட்டு வசதிகளுக்குத் துணையாக, விரிவான விருந்துச் சேவைகள், கோட்டையில் வாகன நெருக்கடிகளைக் குறைக்கும் விதத்தில் கவனமாகத் திட்டமிட்ட பெரிய தரைக்கீழ் வாகன நிறுத்தத் தளம்; இலங்கையின் முதலாவது தனியார்துறை மேம்பாலம் வழியாகப் பிரதான ஹொட்டேலுடன் இணைக்கப்பட்ட அகன்ற ஏரிக்கரைப் பொழுது போக்கு வலயம். வசதிகளில் இவை ஒரு சிலவே...

இவை மட்டுமா? உலகில் வேறெந்த ஹொட்டேலையும் விடத் தனித்துவமாகத் தோன்றும் படி அது உருவமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அறைகள், மண்டபங்கள் முதல், பாவனைக்கான பேனா, காகிதங்கள் வரை கூட, இலங்கையின் செழுமையான கலைத்துவமும் பாரம்பரியமும் பிரதிபலித்து, வரும் விருந்தினர்க்கு மகிழ்வூட்டும்.

மொத்தத்தில் ஹில்டன் இன்டர்நெஷனல்-கொழும்பு, வெறும் ஹொட்டேலாக அல்லநம் நகரத்தின் நடு மாணிக்கமாக மிளிரும்.

**Hilton International**

"ஹில்டன் இன்டர்நெஷனல் - ஹொட்டேல் துறையில் உலகின் அதி மதிப்பான பெயர்.

76 நகரங்களில் 89 ஹொட்டல்கள் - அடிலெயிட் முதல் சூரிச் வரை.

ITL HDL 1427

# பாகிஸ்தானில் பல்கலைக்கழக மாணவர்கள்

# தொடர்ந்து ஆர்ப்பாட்டம்!

கராச்சி, மார்ச், 1

பாகிஸ்தானில் பல்கலைக்கழக மாணவர்கள் பரவலாக ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றனர் அதிபர் ஜெனரல் ஸியாவுல்ஹக் சகல பல்கலைக்கழக மாணவர் அவைகளையும் தடை செய்துள்ளதை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

இரு தினங்களுக்கு முன்னர் பேஷ்வார் மாகாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. அப்போது பல்கலைக்கழக உயர் அதிகாரி ஒருவரின் காரியாலயமொன்று சேதமாக்கப்பட்டதுடன் அதிபர் ஸியாவுல் ஹக்கின் சின்னமொன்றும் எரிக்கப்பட்டது.

பேஷ்வார் பல்கலைக்கழக வளாகத்தின் உபவேந்தரின் அறையும் சேதமாக்கப்பட்டது. பாக். கல்வியமைச்சரின் படமொன்றும் எரிக்கப்பட்டது.

கராச்சியிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றைக் கலைக்க பாகிஸ்தானியப் பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம், குண்டாந்தடிப் பிரயோகம் என்பனவற்றை நடத்தினர்.

நேற்றைய தினம் பாகிஸ்தானின் பல்வேறிடங்களில் மோதல்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றை பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தினர்.

பாக். அதிபர் ஜெனரல் ஹக் மாணவர் அவைகள் மீதான தடைகளை நீக்க மறுத்து வருகிறார். அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் கட்சிகளின் தூண்டுதல்களின்பேரில் இம் மாணவர் அவைகள் செயல்படுவதனாலேயே தாம் அவற்றைத் தடைசெய்திருப்பதாக அவர் கூறினார்.

## பஞ்சாப்பில் கலவரங்கள் தொடர்கின்றன!

அமிர்தஸரஸ், மார்ச், 1

பஞ்சாப் மாநிலத்தில் கலவரங்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. இதனால் இங்கு பல முக்கிய நகரங்களில் இரவு ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படுகிறது.

நேற்று அமிர்தஸரஸில் ஒரு பகிரங்க இடத்தில் குண்டு ஒன்று வெடித்தது இதனால் பெண்கள் குழந்தைகள் உட்பட பன்னிரண்டு பேர் காயமடைந்தனர்.

பல இடங்களில் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது கலவரக்காரர்கள்மீது பாதுகாப்புப் படைகள் தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

இதேவேளை பல பிரபல சீக்கியப் பிரமுகர்கள் கலவரக்காரர்களிடம் போராட்டங்களையும், அரச எதிர்ப்பு நடவடிக்கைகளையும் கைவிடும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். (கி)

## அகதிகள் காணி கோருகின்றனர்

(துணுக்காய்)

யோகபுரம் அகதிகள் முகாமில் உள்ளோர் தாம் இனிமேல் திரும்பி தமது சொந்த இடத்திற்கு செல்ல விருப்பமில்லை எனவும் தமக்கு இப் பகுதியிலேயே காணிகள் பெற்றுத் தரும்படியும் அரசாங்கத்தை கேட்பதாகவும் கூறுகின்றார்கள்.

முகாமில் மொத்தம் 17 குடும்பத்தினை சேர்ந்த 68 பேர் தங்கி உள்ளார்கள் என அகதி முகாம் பொறுப்பதிகாரி திரு. வ, சி. பா. நவரத்தினம் தெரிவித்துள்ளார். (சு)

# மாந்ரே கொலை

## மேலும் இருவர் கைது!

லண்டன், மார்ச், 1

இந்திய ராஜதந்திரி திரு ஆர். எச். மாந்ரே கொலைசெய்யப்பட்டது தொடர்பாக மேலும் இரு இளைஞர்கள் பிரிட்டனில் நேற்றும் கைதானார்கள்.

இவர்கள் இருவரும் காஷ்மீர் விடுதலை இராணுவம் என்ற திரு. மாந்ரேயைக் கொன்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விருவரும் பேர்மிங்ஹாம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை மொத்தம் நான்கு பேரை ராஜதந்திரி மாந்ரே கொலை தொடர்பாகப் பிரிட்டன் பொலிசார் கைது செய்துள்ளனர்.

முதலாவதாகக் கைது செய்யப்பட்ட நபர்மீது கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு மாந்ரே கொலை வழக்குத் தொடர்பான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

கைதான சந்தேக நபர்கள் அனைவரும் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது! (கி)

## அகதிகள் முகாம்

[சாவகச்சேரி]

குருநகர் அகதிகள் முகாம் பண்டசாலையில் இருந்த உணவுப் பொருட்கள், எண்ணெய் வகைகள், கூடாரங்கள் யாவும் கைதடி அகதிகள் முகாமிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

குருநகர் அகதிகள் முகாமில் இன்னமும் சில அகதிகள் குடும்பங்கள் மட்டுமே தங்கியுள்ளதாகவும், இவர்களில் அநேகம் பேர் அக்கராயன் குளத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும், மீதமாகவுள்ள ஒருசில குடும்பங்கள் கைதடி அகதிகள் முகாமுக்கு மாற்றப்படலாம் என்றும் அறியப்படுகின்றது.

## வயல் விழா

(யாழ்ப்பாணம்)

புத்து வெட்டுவான் (முல்லை மாவட்டம்) விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு ஏ. சி. குணரட்ணத்தின் ஏற்பாட்டின் ஒரு 'வயல் விழா' நடைபெற்றது இவ்விழாவிற்கு புத்து வெட்டுவான் குடியேற்றத்திட்ட அதிபர், அப்பகுதி பலநோ.கூ. சங்க, புதிய கிராமோதய சபைத் தலைவர்கள் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் கலந்து கொண்டனர்

இவ்வயல் விழாவில் அப்பகுதியில் இனப்பரிசோதனை செய்யப்பட்ட ஐந்து மாணுவாரி நெல் இனங்களில் பி ஜி 621-1 என்ற 3 மாத சிவப்பு அரிசியை கொண்ட நெல்லினம் ஏக்கருக்கு 98 புசல் விளைவை கொடுத்து சிறந்த இனமாக விவசாயிகளால் தெரிவு செய்யப்பட்டது. (சு)

## கனடா பிரதமர் ராஜினாமா?

மொன்ட்ரியல், மார்ச் 1

கனடாப் பிரதமர் திரு ட்ரூடோ தமது பதவியை ராஜினாமாச் செய்ய விரும்பியுள்ளார்.

திரு. ட்ரூடோ, புதியவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் விதத்திலேயே இந்த முடிவை எடுத்துள்ளாரென்று தெரிவிக்கப்படுகின்றது.

கனேடியப் பிரதமரின் வயது 54 ஆகும். இவர் கனடா மக்களின் மிகவும் செல்வாக்குப் பெற்ற தலைவராக இருக்கின்றார். 1978ம் ஆண்டு இவர் பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டிருந்தார். தொடர்ந்து திரு. ஜோர்க் கிளார்க் பிரதமரானார். ஆனால் அவரின் ஆட்சி நீண்டகாலம் நீடிக்கவில்லை. தொடர்ந்து பொதுத் தேர்தலொன்றில் அவர் தோற்கடிக்கப்பட்டதையடுத்து திரு. ட்ரூடோ மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார்.

மேற்கத்திய ஆட்சியாளர்களில் மிகவும் பிரபலமான திரு. ட்ரூடோ கடந்த மாதங்களில் அணுவாயுத யுத்தங்களைத் தவிர்ப்பது குறித்தும், அவ்வாயுதங்களைத் தடைசெய்வதுபற்றியும் உலகரீதியாகப் பிரசாரம் செய்துவந்தார்.

திரு ட்ரூடோவைக் காலஞ்சென்ற சோவியத் அதிபர் அந்ரபோவ் சோவியத்துக்கு அழைத்திருந்தார். ஆனால் திரு ட்ரூடோவின் சோவியத் விஜயத்துக்கு முன்னர் திரு. அந்ரபோவ் காலமானார். (கி)

# கிளிநொச்சிச் செய்திகள்

கே. வி. கே. திருலோகமூர்த்தி

### சிறிய குளங்கள் திருத்தப்படும்

பன்முக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிறிய குளங்களை அபிவிருத்தி செய்ய ஒன்றரை லட்ச ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் இம்மாவட்டத்திலுள்ள பலசிறிய குளங்களை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இக்குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டதும் சிறு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும்.

### உலக வங்கி நிபுணர்குழு

ஒன்றிணைக்கப்பட்டகிராமிய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக உலகவங்கி நிபுணர்குழுவொன்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளது

செல்வி நித்துமா தலைமையில் வருகைதரும் நிபுணர்குழுவில் மூவர் அடங்குகின்றனர். இவர்களுடன் திட்ட அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் கலாநிதி ஏ. எஸ். குணசிங்கவும் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார்.

### உதவி அரசஅதிபராக பொறுப்பேற்றனர்

கிளிநொச்சி மாவட்டக் கச்சேரிக்கு தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபராக எஸ். அமிர்தலிங்கம் நியமனம் பெற்றுள்ளார். அபிவிருத்திப் பிரிவு உதவி அரசாங்க அதிபராக க குணராசா (செங்கை ஆழியான்) பொறுப்பேற்றுள்ளார் இவர்கள் இருவரும் மன்னார் மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்களாக முன்பு கடமையாற்றியவர்கள்

### மின்சார வசதிக்கு கோரிக்கை

கண்டாவளைப்பகுதிக்கு மின்சாரவசதிசெய்து தருமாறு இப்பகுதி மக்கள் சார்பில் கிராமோதய சபைத்தலைவரும் அதிபருமாகிய திரு எஸ் தர்மரத்தினம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு என் ஜெயநாதனைக் கோரியுள்ளார்.

### "இடமாற்றத்தை ரத்து செய்க"

பரந்தன்கிராமசேவையாளர் திரு. எஸ். ரவீந்திரனின் இடமாற்ற உத்தரவை ரத்துச்செய்யுமாறு கோரும்மகஜர்ஒன்றை பரந்தன் கிராமோதய சபைத் தலைவர் திரு. இ. திருச்செல்வம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு என். ஜெயநாதனிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

மிகவும்பின் தங்கிய நிலையிலுள்ள பரந்தன் குமரபுரம்பகுதியின் முன்னேற்றத்திற்காக கிராம சேவையாளர் ரவீந்திரன் அயராது பாடுபட்டு வருபவர் எனவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காந்திய இயக்க மண்டபத்தில் தஞ்சம்

கிளிநொச்சிப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது வீடுகளை இழந்து நிர்க்கதியான மக்களை காந்திய இயக்க மண்டபத்தில் தஞ்சமடைந்துள்ளனர் இவர்களுக்கான உதவிகளை இந்து இளைஞர் கலாச்சார மன்றத்தினர் வழங்கிவருகின்றனர்.

### விடுதிக்கட்டட வேலைகள்

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயம் சிங்கள மகா வித்தியாலயம். சென் திரேசா மகளிர் கல்லூரி, மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிக்கட்டட வேலைகள் துரிதகதியில் நடைபெற்றுவருகிறது இவ்விடுதிக்கட்டட வேலைகள் பூர்த்தியானதும் ஆசிரியர்களின் தங்குமிடப் பிரச்சினை தீரும்.

### வெள்ள நிவாரண உதவிகள்

கிளிநொச்சி பாரதிபுரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு பாரதிபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு மாணிக்கமகணபதி எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக வெள்ள நிவாரண உதவிகள் கிடைத்தது இக்கிராம மக்களே வெள்ள நிவாரணம் கிடைக்காததற்கு ஆட்சேபம் தெரிவித்து சத்தியாக்கிரகம் இருந்தோராவர்.

### உபமின் நிலையம்

வட்டக்கச்சியில் இதுவரை மின்சாரம் பெறாத பகுதிகளுக்கு மின்சாரவசதி கிடைக்க நடவடிக்கைஎடுக்கப்படுகிறது. இதற்கென உப மின்நிலையம் ஒன்றும் நிறுவப்படவுள்ளது இதுவரை ஹட்சன்வீதி மட்டுமே மின்சாரவசதி செய்யப்பட்டுள்ளது.


## விசேட அறிவித்தல்

### இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரிப்பாட நெறிகள்

### கல்வியாண்டு 84/85

பாடநெறிகள்:
G. A. Q. - B. A
First in comm - B. Com.
First in Laws - L L B.

மேற்படி பாடநெறிகளுக்கான 2வது பிரிவு வகுப்புகள்

**1984 மார்ச் மாதம் 16ம் திகதி**

ஆரம்பமாகின்றன

G. C. E. A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மேற்குறிக்கப்பட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 15-3-84**

● பேராதனைப் பல்கலைக்கழகத்தில் G A Q பாடநெறிக்குப்பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை 10-3-84 தொடக்கம் எமது நிறுவனத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு: நேரில்/தபாலில்.

REGISTRAR

ASTAN INSTITUTE

166/1 HOSPITAL ROAD - JAFFNA.

# மலேசியா, சிங்கப்பூர் விஜயம்

ஒரு ஜெர்மன் அறிஞர் இந்தியாவைப்பற்றி ஒரு நூல் எழுதினார். அதைப்பிரசுரிக்கு முன் தான் எழுதியதில் ஏதாவது திருத்தங்கள் செய்ய வேண்டுமோவென்று பார்ப்பதற்கு இந்தியா சென்றார். மூன்றுமாதம் தங்கினால்போதுமென்றெண்ணினார். இந்தியாவைப் பார்க்கப்பார்க்க இன்னும் காலம் தேவை போல் தோன்றியது இப்படியே இரு ஆண்டுகள் ஓடி மறைந்தன

இரண்டு ஆண்டுகளின் பின் ஜெர்மனி திரும்பிய அவர் அந் நூலைப்பிரசுரிக்கவில்லை. காரணம் இந்தியாவைப்பற்றி அறிந்து கொள்வதற்கு முழு வாழுநாளே வேண்டும் போல் தோற்றியது. அவருக்கு இதே போன்று மலேசியா, சிங்கப்பூரில் சில வாரங்கள் தங்கி ஒரு கட்டுரை எழுதுவதிலும் கஷ்டமுண்டு ஆயினும் இந்த நாடுகளுக்கு இருபத்தைந்து முறைகளாவது சென்றிருக்கிறேன். அதோடு இரு ஆண்டுகள் தொடர்ந்து வசித்திருக்கிறேன். ஆகையால் 25 ஆண்டுகளில் இந்த நாடுகளில் நடந்த மாறுதல்களையும் முன்னேற்றங்களையும் ஓரளவு அறியக் கூடியதாயிருக்கின்ற காரணத்தால் தான் இக்கட்டுரையை எழுதலாம் என்ற துணிவு ஏற்பட்டது.

## மலேசியாவில் இந்தியர்

மலேசியாவில் நூற்றுக்குச் சுமார் பத்து வீதம் இந்திய வம்சாவளியினர் வசிக்கிறார்கள். சிங்கப்பூரில் இந்த வீதத்திற்குக் குறைவாயிருக்கும். சிங்கப்பூர் என்ற பெயரை சிங்கப்புரமென்று இராஜேந்திரசோழன் கொடுத்ததாக ஒரு அரசாங்க பிரசுரத்தில் கவனித்தேன். இந்த இரு நாடுகளிலும் பல இனமக்கள் இருக்கிறார்கள். மலேசியாவில் மலாய் மக்களும் சிங்கப்பூரில் சீன மக்களும் ஆகக்கூடுதலாக வாழ்கிறார்கள். இலங்கை மக்களின் மிகக்குறைவே இருநாடுகளிலும் சேர்ந்து ஒரு இலட்சத்துக்குழுட்பட்டவர்களே இருக்கலாம் என மதிப்பிட முடிகிறது. அதாவது நூற்றுக்கு ஒரு வீதத்திற்கும் குறைவாய்க்காணப்படுகிறது இந்திய, இலங்கை மக்களுக்குப் பல இந்து கோவில்களும் மொழி கலாசார தாபனங்களும் உண்டு. இவற்றில் முக்கியமானவை தமிழருக்கே இருக்கின்றன.

நா. மாணிக்க இடைக்காடர்

தென். ஆசியா நாடுகளையும் தென்கிழக்கு ஆசிய நாடுகளாகிய மலேசியா சிங்கப்பூரையும் பார்க்குமிடத்து பல வித்தியாசங்களுண்டு எங்களுக்கு குறைவாக சில விஷயங்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன, அவை அவர்கள் பிரச்னை. எங்களிலும் பார்க்க சில விஷயங்களில் அவர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். இவையாவன யாது என்ன காரணங்களால், என்ன சூழ்நிலைகளால் என்று பார்த்தால் எங்களுக்கு பயன்தரும். வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கையில் தான் முக்கிய வித்தியாசமுண்டு. எப்படி வருவாயைக் கூட்டிக்கொண்டு போவதென்பது முக்கியமாக சிங்கப்பூர் மக்களின் அடிப்படைக் கொள்கை. இதனால் ஆக்கபூர்வ கருமங்களில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். பண நோக்கத்துடன் பார்த்தால் எவ்வளவுமுன்னேறியிருக்கிறார்களெனத் தெரிகிறது பல ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூர் ஒரு வெள்ளிக்கு (dollar) எங்கள் ஒரு ரூபா அறுபது சதம் பெறுமதியாயிருந்தது. இன்று பதினொன்றரை ரூபாவாயிருக்கிறது. இப்படி ரூபாயின் பெறுமதி விழுவதற்கு நாட்டில் என்ன பிழை போனது! யாரின் பிழை என்று கூறுவது! யாராயிருந்தாலென்ன, எப்படி எதிர் காலத்தில் நிவர்த்திசெய்வதென்பதே எங்கள் நோக்கமாயிருக்கவேண்டும்.

## பிறநாடுகளுக்கு முன்மாதிரி

மொழி, சமயம், கலாசாரம் என்று கூறி கூடிய கவனத்தை இவையில் செலுத்துவதால் ஆக்கபூர்வவேலைகளில் போதிய கவனத்தைச் செலுத்தாமல் விட்டுவிட்டோம். ஆங்கிலத்தில் கூறுவதென்றால் எங்கள் (Priority) முன்னுரிமையில் தவறுண்டு. மொழி, சமயம், கலாசாரத்தைக் கவனிக்கப்படாதென்ற அர்த்தமல்ல. ஆனால் இதற்கும் வரம்புண்டு என்பதே சிங்கப்பூர் மக்களின் கொள்கை. தங்கள் மேம்பாட்டுக்கு எந்த எந்த நாட்டிலே எந்த ஆக்கபூர்வ வேலைகள் பயன்தருகின்றனவோ இவைகளை சிங்கப்பூர் மக்கள் தங்கள் சிறு தீவுக்குக் கொண்டுவந்துவிடுகிறார்கள். அதோடு மிகவும் மூளை வலிமை கூடிய சிலர் ஆழ்ந்து யோசித்து மறுதேசங்களிலில்லாத சில கருமங்களையும் தொடக்கியிருக்கிறார்கள். உதாரணமாக சிங்கப்பூர் தபால் இலாகா சேமிப்பு வங்கி உலகுக்கே ஒரு வழிகாட்டியாயிருக்கிறது 25 இலட்சம் மக்களுக்கு சுமார் பத்து இலட்சம் கணக்குப் புத்தகங்களுண்டு. சிறுதீவு ஆகையால் எல்லாத் தபால் கந்தோர்களும் ஒரு கொம்பியூற்றர் (Computer) மூலம் ஒருவருக்கு எவ்வளவு கணக்கில் இருக்கிறதென்று உடனே எந்தக் கந்தோரிலும் அறிந்துகொள்ளலாம். வங்கிகளை விட்டுவிட்டு பலர் தங்கள் அன்றன்றுட வாழ்க்கைக்குத் தபால் கந்தோர் மூலம் பணத்தை உபயோகிக்கிறார்கள். வங்கிகளில் நாளுக்கு நாள் கையிலிருக்கும்(Current) கணக்கு வட்டி கிடையாது. ஆனால் தபால் கந்தோர் சேமிப்பு வங்கியிலுண்டு. மற்றது ஐந்து நிமிடத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சில வருடங்களுக்குமுன் நான் சிங்கப்பூர் சென்றபொழுது துணை உப பிரதமர் திரு இராசரெத்தினத்தின் மனைவியை ஒரு தபால் கந்தோரில் கண்டேன். எனது சினேகிதனுக்கு இவரைத் தெரியுமாதலால் என்ன இங்கே செய்கிறீர்களென கேட்க அவர் கூறினார், தான் வங்கியில் கணக்கு வைக்காமல் தபால் கந்தோரிலே வைத்திருப்பதாகச் சொன்னார். நான் ஒரு சிநேகிதன் வீட்டில் இம்முறை தங்கியிருந்தபொழுது எப்ப வங்கிக்குப் போகிறீர்கள் எனக்கும் சொற்பவேலையிருக்கிறது வருகிறேனென்றேன். அவர் அதற்கு வங்கிக்கு அடிக்கடி போவது கிடையாது. தேவையான பணத்தை தபால் கந்தோர்மூலம் பெற்றுக்கொள்கிறேனென்றார். தபால் கந்தோர் மக்களுக்கு ஒரு பெரிய சேவை செய்கிறது. அதோடு போதிய பணம் சேமித்து வைப்பதால் அரசாங்கம் இப்பணத்தை ஆக்கபூர்வ வேலைகளுக்கு உபயோகித்து நாட்டை முன்னேற்றுகிறது.

இயற்கை வசதி குறைந்த இந்தச் சிறுதீவு பலவித வாணிபத்தில் ஈடுபட்டிருக்கிறது. தாய்லாந்து. பிலிப்பீன்ஸ். இந்தோனீஷயா, மலேசியா பொருட்களை வாங்கி உலகிற்கு சிங்கப்பூர் விற்கிறது. நேரே தாய்லாந்து மற்ற ஆசியன் (Asean) நாடுகளில் வாங்க தாமதமிருப்பதால் உலக நாடுகள் சிங்கப்பூர் மூலம் வாங்குகின்றன. இதேபோல் விற்பனையும் நடைபெறுகிறது உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன் சுமத்திரா தீவைநகர் மெதானில் நான் கண்ட சம்பவத்தை கூறுகிறேன். இந்தோனிஷிய தோட்ட சொந்தக்காரன் ஒருவர் தனது றப்பரை ஒரு சீன வியாபாரிக்கு கொடுக்கும் பொழுது நான் அவரை கேட்டேன், ஏன் நீங்கள் இந்தோனிஷிய அரசாங்க றப்பர் வாங்கும் தாபனத்திற்குக் கொடாமல் சீன வியாபாரிக்கு கொடுக்கிறீர்களென்று. அதற்கு அவர் அரசா

[8-ம் பக்கம் பார்க்க]


PAPER CLASS 1984 (AUGUST)

ஆரம்பம்: 3-3-84 சனி பிற்பகல் 1 மணி

1-00—2-00 Botany
2-00—3-00 Zoology
3-00—4-00 Chemistry
4-00—5-00 Physics

86 A/L WEEKEND CLASS

ஆரம்பம்: 3-3-84 சனி நண்பகல் 12 மணி

DAY CLASS A/L 1984 (AUGUST)
4-வது பிரிவு

ஆரம்பம்: 5-3-84 திங்கள் காலை 9 மணி

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. ஜெகன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாகநாதன்
Pure / Applied Maths: திரு. கிருஷ்ணு

தூய பிரயோக கணிதம்

ஆரம்பம்: 5-3-84 திங்கள்

7-00—8-00 புள்ளி விபரவியல்
8-00—9-00 உராய்வு
10-00—11-00 தொடர்பு வேகம்
11-00—12-00 தொடர்
1-00—2-00 ஆள் கூற்று கேத்திரகணிதம்
2-00—3-00 நீர் நிலையியல்

ஆசிரியர்: திரு. கிருஷ்ணு

விபரங்கட்கு: NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, Jaffna

# மலேசிய, சிங்கப்பூர்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கை தாபனத்திற்கு கொடுத்தால் பணம் கிடைக்க இரண்டு வாரம் செல்லும் மற்றது அரசாங்க உத்தியோகஸ்தருக்கு (Store Keeper) ஏதாவது சந்தோஷமும் கொடுக்க வேண்டும் ஆனால் சீன வியாபாரிக்கு கொடுத்தால் உடனே பாதிப்பணமும் அன்று பின்னேரம் சிங்கப்பூருக்கு போகும் கப்பலில் றப்பரை ஏற்றினதும் மிகுதியையும் கொடுத்து விடுவார் என்றார். இந்த உதாரணமே போதும் ஏன் சிங்கப்பூரில் வாணிபம் முன்னேறுகிறதென்பதற்கு.

துறைமுகத்தை எடுத்துக் கொண்டால் கடந்த சில ஆண்டுகளில் உலகில் ஐந்தாவது துறைமுகமாகி நாலாவதாகி மூன்றாவதாகி இப்பொழுது இரண்டாவதாகிவிட்டது என்று கேள்வி. றொட்டர்டாம் (Rotterdam)க்கு இருக்கும் முதலிடத்தை பிடிக்க வேண்டுமென்று சிங்கப்பூர் துறைமுக அதிகாரிகள் பாடுபடுகிறார்கள். இதே போல் வங்கியிலும், கடைகளிலும் அரசாங்க அலுவலகங்களிலும் எல்லோரும் சுறுசுறுப்பாக கடமையாற்றுகிறார்கள்.

ஏதாவது அலுவலில் தொழில் நுட்பம் குறைவாகக் காணப்பட்டால் எந்த நாடாயிருந்தாலென்ன அங்கிருந்து தொழில் நுட்ப வல்லுநரை வரவழைக்கிறார்கள் அவர்கள் கடமையை செவ்வனே செய்தால் அவர்களுக்கு சிங்கப்பூர பிரஜா உரிமையை வழங்கி திருப்திப்படுத்தி விடுகிறார்கள். இதனால் இந்த சிறு நாட்டில் மூளை வலிமை கூடியவர்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது மூன்றாவது மண்டல நாடுகளிலிருந்து வரும் வல்லுநர்கள் சிங்கப்பூரிலுள்ள வசதிகளை கண்டு மோகம் கொண்டு பிரஜா உரிமை கொடுத்தவுடன் ஏற்றுக்கொள்கிறார்கள். இப்படி சிங்கப்பூர் தனது தராதரத்தை உயர்த்திக் கொள்கிறது.

## மலேசியா

மலேசியாவில் சிங்கப்பூரைப் போல் முன்னேற்றமில்லை ஆனாலும் தென் ஆசிய நாடுகளிலும் பார்க்க முன்னேறியிருக்கிறது. 25 வருடத்திற்கு முன் மலேசியா றப்பரையும் ஈயத்தையுமே நம்பி வாழ்ந்தது. இப்பொழுது பாம் மரம் (oil palm) றப்பரைப் பார்க்க முன்னேறிவிட்டது. மற்றது நிறைய கைத்தொழில்கள் வளர்ந்து விட்டன. விவசாயம் முன்னேறி நெல்லு சுயதேவையை பூர்த்தி செய்கிறது. இந்த நாட்டின் முக்கியமாக இங்கே வாழும் சீன, இந்திய மக்களின் கடும் உழைப்பால் காட்டின் வருவாய் கூடிக்கொண்டு போகிறது.

சிங்கப்பூரைப்போல் நாங்களும் வாணிபத்தில் ஈடுபட முடியாதா என்று யோசிக்க வேண்டும் பகைாலம் இலங்கைக்கு தேவையான உணவை அரசாங்கச் சார்பில் வரவழைத்த மறைந்த சிங்கிள் சேவிஸ் உயர் அதிகாரி ஆழ்வாப்பிள்ளை குடாநாட்டில் உள்ள நாங்கள் வங்காள விரிகுடாவை சூழ்ந்திருக்கும் நாடுகளுடன் வாணிபம் செய்து எங்களுக்கு தேவையான பொருளை சம்பாதிக்கலாமே என்று கூறுவார். இவை நாங்கள் ஆழ்ந்து யோசித்து மத்திய கிழக்கிலிருந்து வரும் பணத்தை உபயோகித்து மத்திய கிழக்கிலிருந்து தாயகம் திரும்பும் இளைஞர்களை இந்தத் திசைக்கு ஊக்கிவிக்கலாம் இதற்கு வாணிபத்தில் முதிர்ந்தவர்கள் ஆக்கபூர்வ எண்ணங்களை எடுத்துரைக்க வேண்டும். தொடர்ந்து வைத்தியத்திற்கும் பொறியியலுக்கும் கணக்கு பரிசோதனைக்கும் இளைஞர்களை தேர்ந்தெடுத்து கல்வி கொடுப்பதோடு நின்று விடாமல் புது எண்ணங்களையும் கருமங்களையும் தொடக்க வேண்டும். தனித்தனியே எங்களிடம் பேரறிய வல்லுநர் உண்டு. ஆனால் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல கருமத்தை நம் இனத்திற்கு செய்வதற்கு தக்க இயல்பு எங்களிடம் குறைவாய் தான் இருக்கிறது இதை உணர்ந்து. நிவர்த்தி செய்து. சமூகத்தை முன்னுக்கு கொண்டு செல்வதே எமது கடன்.

## சீனமக்கள்

சீனமக்களை பார்க்குமிடத்து அவர்கள் எங்கிருந்தாலும் எவ்வித அரசியல் அமைப்புக்குள் வாழ்ந்தாலும் வாழ்க்கையில் சித்தியடைகிறார்கள். பொதுவுடமை நாடு சீனா மக்கள் மூலம் ஆட்சி நடைபெற்ற சிங்கப்பூர் இப்படி வேறுவித அரசியலிலும் சீனமக்கள் முன்னேறி விடுகிறார்கள் ஆகையால் அரசியல் அமைப்புத்தான் காரணம் என்று கூறி விடமுடியாது. காரணம் அம்மக்களின் பிரயாசையும் புத்தி கூர்மையான அறிவு மென்றே கூறலாம் தமிழ் மக்கள் ஆகிய நாம் சீனமக்களுக்கு ஒரு விதத்திலும் குறைந்தவர்களல்ல. எங்கள் அபிவிருத்தியில் பல இடைவெளியுண்டு. இதைத்தான் நிரப்ப வேண்டும். பழைய பெருமைகளை யோசித்துக்கொண்டு இருக்காமல் எதிர்காலத்திற்கு என்ன செய்யலாம் என்று யோசித்து முடிவெடுக்க வேண்டும். மத்திய கிழக்கிலிருந்து வரும் பணத்தை முக்கியமாக வீடு கட்டுவதில் செலவழிக்காமல் ஆக்க பூர்வ கருமங்களில் முதலீடு செய்தால் செய்கிறவருக்கும் பயன் உண்டு. சமூகத்திற்கும் பயன் உண்டு.

உலகிலே எந்த நாட்டிலும் எல்லா வசதிகளும் கிடைப்பதில்லை மலேசியா, சிங்கப்பூர் வாழும் எங்கள் மக்களுக்கு போதிய பணமும் வாழ்க்கை வசதிகளுமுண்டு. ஆனால் மொழி, சமயம், கலாசாரத்தில் ஒரு இக்கட்டான எதிர்காலத்தை சமாளிக்க வேண்டி வரும். எங்களுக்கு இது விடயங்களில் அவர்களிலும் பார்க்க நல்ல சூழ்நிலையிருந்தாலும் எங்கள் கஷ்டத்தில் முக்கியமானது பொருளாதார பலவீனம். இதை சமாளிப்பதற்கு மலேசியா, சிங்கப்பூர் ஓர் எடுத்துக்காட்டாயிருக்கட்டும். மொழி, சமயம், கலாசாரத்தை பேணுவது போல் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோமாக.

ஹோம் பிறின்ஸ் லிமிட்.
உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறின்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24810

2. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480

3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370

4. நியூ லங்கா அலுமீனியம்
இன்டஸ்றீஸ் விற்பனவு நிலையம்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறின்ஸ் லிமிட்.
463, காலி வீதி,
கொழும்பு-6
தொலைபேசி: 589190—587680

2. ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 28277

# இன்றைய பலன்

ருத்ராங்கதம் 19-ம் திகதி
(2—3—84)
வெள்ளிக்கிழமை

மேடம்: தடுமாற்றம் தற்பெருமை மூலம் ஏற்படும்கண் துடைப்பு வேலை நடக்கும் கவனம் செலுத்தவும் பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப்பேணி நடக்கவும்.

இடபம்: தாய்வழியால் பெருமைகள் சேரும் தனத்துடன் வாழ்வும் கிடைக்கும் எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள் மருத்துவத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

மிதுனம்: இன்பத்தின் இணைப்பில் இதயத்தைப் பறிகொடுப்பீர்கள் பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் காதல்கணை தாக்கும் குடும்பத்தவர்களுக்கு சுவையான சம்பவங்கள் உண்டு.

கடகம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும் வாகனம் செலுத்துவோர் அதிக நிதானத்துடன் இருக்கவும் பிரயாணத்தின்போது பொருள் களவாகக்கூடும் தொழில் புரியும் இடத்தில் பொறுமை வேண்டும்.

சிங்கம்: பெண்களுடனான தொடர்புகள் பெருகும் பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல் கணை தாக்கும் கலைச்சுவைப் பொருட்களில் அதிக ஆர்வம் ஏற்படும் மனநிறைவும் உண்டு.

கன்னி: பண்ணிய காரியத்தில் எதிர்பாராத தடை ஏற்படும் தவிர்கள் மூலம் நன்மையடைவதற்கு இடம் உண்டு கூட்டுவியாபாரத்தில் மோசடி அதிகரிக்கும் நன்றாக சிந்தித்தபின் செயலாற்றுக.

துலாம்: இரக்க சிந்தை மேலிடும் பொதுப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள் பெரிய இடத்துத் தொடர்பு ஏற்படுவதற்கும் இடமுண்டு சிலர் வேற்று விவகாரங்களில் ஈடுபடுவார்கள் கண்ணியமான தினம்.

விருச்சிகம்: தொழில் துறையில் வெற்றி கிடைக்கும் மேலதிகாரிகளின் பாராட்டுக்கு இலக்காவீர்கள் சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம் சிறப்பான தினம்.

தனுசு: பொருளாதார நிலை சீரடையும் சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படலாம் வெளியூரிலிருந்து செய்தி கிடைக்கும்.

மகரம்: இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும் மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும் உணர்ச்சிவசப் படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும் மன அடக்கம் நன்று.

கும்பம்: பேச்சு வார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது அவசர முடிவின் மூலம் விரோதத்தை தேடிக்கொள்வீர்கள் துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

மீனம்: நிதியில் அபிவிருத்தி காணப்படும் பூர்வீகச்சொத்து ஒன்று உமக்குக் கிடைக்கக் கூடும் புண்ணிய விருத்திக்கும் இடமுண்டு உடல் நிலையில் அபிவிருத்தி தென்படும் திருப்திகரமான நாள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
வேலுப்பிள்ளை ரவீந்திரன்

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்
BASF
குமுலுஸ் எஸ்
நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்
● நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
● மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
● மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது
இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.
குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 16/50




கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்
மக்வுட்ஸ் ஸ்தாபனம்
LIMITED
2, ஞானார்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல.91
(முன்னாள் மருதானைரோட்) கொழும்பு-8.
தொலை பேசி: 597965-9
Metropolitan

யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி
நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ் நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்.
பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, அமெரிக்கா
செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும் பயணச்சீட்டுக்களை
மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.
CROSS TRAVEL
SERVICES (PTE) LTD,
STAGE II, MODEL MARKET,
No 5 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD.
JAFFNA.
Phone: 22065, 22040

# ‘மாணவர்களை நல்வழிப்படுத்துவது ஆசிரியர், பெற்றோர் கடமை’’

## பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி வெள்ளி விழாவில் அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி பேச்சு

(நமது புலோலி நிருபர்)
(ஏ. என் எஸ். திருச்செல்வம்)

‘‘நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு மாணவ சமுதாயம் நல்வழி நடாத்தப்படவேண்டும். மாணவர்களை நல்வழிப் படுத்துவதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் ஒருமித்து நடவடிக்கைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும். பழைய மாணவர் கல்விகற்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டுமே தவிர அரசியலில் ஈடுபடக் கூடாது. வாழ்க்கைக்கு வேண்டிய பூரண அறிவைப்பெற்றுக் கொள்வதற்குமாணவர்களுக்கு ஆங்கிலக்கல்வி மிகமுக்கியமானதாகும்.

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வெள்ளிவிழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அனுராதபுரம் மேல்நீதிமன்றநீதிபதிதிரு எஸ். ஆனந்தகுமாரசாமி குறிப்பிட்டார். விழாவிற்கு டாக்டர் ஏ பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். பாடசாலையின் முன்னாள் அதிபர்களின் பெயர்பலகைகளை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை இளைப்பாறிய அதிபர் திரு. எஸ், கந்தசாமியும், முன்னாள் மாணவதலைவர்களின் பெயர்ப் பலகையை மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமியும், முன்னாள் விளையாட்டுக் குழுத்தலைவர்களின் பெயர் பலகையை முன்னாள் அதிபர் திரு கே. பூரணம்பிள்ளையும், முன்னாள் கிரிக்கெட் கோஷ்டித் தலைவர்களின் பெயர்பலகையை முன்னாள் அதிபர் திரு. எஸ், இரத்தின சபாபதியும், முன்னாள் காற்பந்து கோஷ்டித் தலைவர்களின் பெயர்ப்பலகையைத் திரு. எஸ் பத்மநாதனும் திரைநீக்கம் செய்துவைத்தனர். தொடர்ந்து உரையாற்றிய மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஆனந்தக்குமாரசாமி குறிப்பிட்டதாவது:-

நான் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழையமாணவனாக இருப்பதனால் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் எந்தநாட்டில் இருந்தாலும், வாழ்க்கையில் எந்தநிலையில் இருந்தாலும் பெருமைப்படவேண்டும். நான் இங்கு கல்விகற்ற காலத்தில் நேரம் தவறாமை, கிரமம், கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகிய பண்புகள் எமக்கு ஊட்டப்பட்டபடியினாலேயே இன்று ஜனநாயக அமைப்பில் சிறந்த பிரஜைகளாக நாங்கள் வாழக்கூடியதாக இருக்கின்றது. இக்கல்லூரியில் தொடர்ந்தும் பழைய பாரம்பரியப்பண்புகள் நிலைநிறுத்தப்பட்டுவருவது பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

இன்று நாட்டில் அமைதி குன்றியிருப்பதற்கு மாணவர்கள் சரியானவழிப்படி நடாத்தப்படாமையே காரணமாகும் இந்நிலை உலகம் முழுவதும் காணப்படும் குறைபாடாக உள்ளது. பாடசாலைகளில் மாணவர்கள் சரியான வழி நடாத்தப்படும் போது தான் எதிர்காலத்தில் நாம் அமைதியையும், ஒழுங்கையும் பாதுகாத்து நாட்டில் பாதுகாப்பையும், சட்டத்தையும் நிலைநிறுத்தமுடியும். எனவே ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் ஆகியோர் இந்நடவடிக்கைகளில் ஒருமித்து செயற்படவேண்டும். மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது. பகிஷ்கரிப்பு உண்ணாவிரதம் என்பவற்றை மேற்கொள்ளக்கூடாது. மாணவர்கள் தமது அறிவை மேலும் வளர்த்து உலக அறிவியலில் சிறந்து விளங்குவதற்கு ஆங்கிலம் மிகமுக்கியம் என்பதனால் ஆங்கிலக் கல்வியில் அதிக அக்கறை காட்டவேண்டும்.

நாங்கள் கல்விகற்ற காலத்தில் அதிபர் திரு பூரணம்பிள்ளை அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுவந்த நேரம் தவறாமை, கிரமம், கட்டுப்பாடு போன்ற பண்புகள் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்படுவதற்குச் சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 180 வருடங்களாகின்றபோதிலும் பழையமாணவர் சங்கம் இப்போதுதான் 50வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது கவலைக்குரியதாகும். பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர்கள் தம்மைத்தாம் வெளியேறும்தினத்தன்றே பழைய மாணவர் சங்கத்தின் ஆயுட்கால அங்கத்தவராகப் பதிவுசெய்துகொள்ளல் வேண்டும்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இளைப்பாறிய அதிபர் திரு.எஸ் கந்தசாமி உரையாற்றுகையில் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாகத் திகழ்வதற்கு இன்றைய மாணவர்களுக்குச் சரியான வழிகாட்டல் இடம் பெறவேண்டும். அப்போது தான் அவர்கள் பண்பாடுள்ளவர்களாக்கப்பட்டு அறிவால் மேம்பட்டு வாழ்வில் உயர்வடையமுடியும். மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கவேண்டும்’’ என்றார்.

விழாவிலே கலந்து கொள்வதில் மிகமகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரியில் நான் அதிபராக இருந்தபோதுதான் மாணவத் தலைவர் முறை கொண்டுவரப்பட்டது. அப்போது அதற்குப் பெரும் எதிர்ப்பும் ஏற்பட்டது. ஆனால் இம்முறையினால் நிர்வாகத்திற்கு மிகப்பாரமாக இருந்த கடமைகள் பல சுலபமாக்கப்பட்டது தொடர்ந்தும் இக் கல்லூரியின்தரம் அதேநிலையில் பேணப்பட்டு வருவது பாராட்டப்படவேண்டியது

கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு கே பூரணம்பிள்ளை இப்போதைய அதிபர் திரு டபிள்யூ என். எஸ் சாமுவேல் ஆகியோரும் பேசினர்.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகச் சட்டத்தரணி ஆர். உருத்திராவும் இணைச்செயலாளர்களாக சட்டத்தரணி ஆர் டி, இரத்தினசிங்கம், ஆசிரியர் டி. ஆர் அருமைநாயகம் ஆகியோரும் பொருளாளராக திரு வி பரமகுருவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

கிரிக்கெட்:

## மைதானம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென் பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையிலான இருநாள் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

மேற்படி போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. மழைகாரணமாக பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் போட்டியை நடத்த முடியாமல் இருப்பதினாலேயே, இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

(வி

---

## சமயச் சான்றோர்

தெல்லிப்பழை மேற்கு -விழிசிட்டி அருள்மிகு வீரபத்திர சுவாமி கோவில் ஆலயபரிபாலன சபையின் தலைவராக அமரர் கந்தப்பிள்ளை இளையர் அவர்கள் பணிபுரிந்துள்ளார். அவரது ஊக்கத்தினாலும் அயராத உழைப்பினாலும் மேற்படி கோவில் ஒரு லட்சம் ரூபா செலவில் புனர் நிர்மாணம்செய்யப்பெற்று கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இவ்வளவு விரைவில் இது பூர்த்திசெய்ததையிட்டு இவரைப் பாராட்டாதவர்கள் இல்லை. மேலும் திருமஞ்சனக்கிணறு புதிப்பிக்கப்பட்டுள்ளது' நிருத்த மண்டபவேலையும் நடந்துகொண்டிருக்கிறது. தமது கடுமையான சுகவீனத்தையும் பொருட்படுத்தாது நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நிருத்தமண்டப வேலையையும் உடனே தொடக்கிவைத்தார். அவ்வேலை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கையில் மின்னாமல் முழங்காமல் சிவபதமெய்திவிட்டார். இவர் சமயப் பற்றும், பொதுநலவிருப்பும் பிறர்க்கு உபகாரிவாம் இயல்பும் கொண்ட சான்றோர் ஆவார். ஆற்றல் மிகுந்த தலைவரை இழந்துவிட்டோம். எமது சபை சந்திரன் இல்லாத வானம்போல பொலிவிழந்துள்ளது. அவரின் ஆன்மா சாந்தியடைவதாக.

த. சுப்பிரமணியம்

---

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 - நாட்டுவளம் (தமிழ்)
6-05 - சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-25 - சிறுவர் இசைநிகழ்ச்சி (சிங்களம்)
6-55 - செய்திகள் (தமிழ்)
7-15 - வினாவிடை நிகழ்ச்சி
7-45 - தொலைக்காட்சி நடனம் (சிங்களம்)
8-15 - செய்திகள் (சிங்களம்)
8-35 - சிங்கள நிகழ்ச்சி
9-05 - ஆங்கிலத் திரைப் படம்
9-30 - செய்திகள் (ஆங்கிலம்)
9-50 - திரைப்படத் தொடர்ச்சி
10-30 - உலகச்செய்தித் தலைப்புகள்
10-35 - திரைப்படத் தொடர்ச்சி
10-50 - நிகழ்ச்சிகள் நிறைவு

---


சாந்தி (... நகர்)
இன்று
10-30, 2-30, மட்டும்
Roger Moore
FOR YOUR EYES ONLY
மாலை 6-00 9-30
கமல் - தீபா
அந்தரங்கம்
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (...)
10 30, 2-15, 4-45
7-00 9-30
Bruce Strikes Back

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
கமல்— ஸ்ரீதேவி— நடித்த
மீண்டும்கோகிலா
(ஈஸ்மன் கலர்)

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
எம்.ஜி. ஆர். சரோஜாதேவி
எம். ஆர். ராதா
பெற்றால் தான் பிள்ளையா

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
9-30
கமலஹாசன்-மாதவி
சுவப்னா-தியாகராஜன்
பாரதிராஜாவின்
டிக் டிக் டிக்
(ஈஸ்மன்கலர்)

வின்ஸர் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
பலநாட்களுக்குப் பின்னர்
எம். ஜி. ஆர்.
ரசிகர்களின் ஆவலைப்
பூர்த்திசெய்ய இதோ அவரின் அற்புதப் படைப்பு
தேவிகா — வீரப்பா
நடித்த
ஆனந்தஜோதி
(புதிய பிரதி)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-30.
Airport 80

வெலிங்டன்
தினசரி 10-30, 2-30, 6-00
9-30
ராமராவ் - அஞ்சலிதேவி
லவகுசா
(ஈஸ்மன் கலர்)
பாடசாலை மாணவர்க்கு
விசேட காட்சி
ஒழுங்கு செய்யலாம்
3-3-84 முதல்
IDEAL MARRIAGE
Part II

இன்னும் சில தினங்கள் மட்டும்
நீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
மோகன்..
திருமதி பாக்யராஜ்...
பயணங்கள் முடிவதில்லை
- வண்ணம் -
Coming
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar
Jaikishan

ஹரன் (யாழ். நகர்)
மோஜி, ஸ்ரீப்பிரியா,
வசந்தத்தில் ஓர்நாள்
(ஈஸ்மன் கலர்)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2-30, 6-00
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
என் அண்ணன்

THE JAFFNA COLLEGE
ALUMNI ASSOCIATION
Annual General Meeting

The Annual General Meeting of the Jaffna College Alumni Association will be held on Saturday 10th March 1984, at Jaffna College, Vaddukoddai. All old boys and old girls of the college are invited.

OUTSTATION ALUMNI WHO HAVE TAKEN UP RESIDENCE IN THE NORTH ARE WELCOME.

PROGRAMME
9—00 a. m. — Praise Service.
10—00 a. m. — Annual General Meeting followed by Fellowship —lunch.

(Lunch will be provided at a subsidised rate of Rs. 5/- per head. Those attending may give their names either to the under-signed or the Treasurer J. C. A. A. by Tuesday 6th March.)

ALUMNI RELATIONS OFFICER,
Jaffna College, Vaddukoddai.
1104

HOME FINANCE LIMITED
FOR SALE
NEWLY IMPORTED NISSAN CARAVAN
6 SEATER DIESEL DELIVERY VAN
1979/80 Model
Reconditioned in Japan.
Finance available.
Apply to:
HOME FINANCE LTD.,
82, KANNATHIDDY ROAD,
JAFFNA.

## தொடர்ந்து பெய்யும் பெருமழையினால்

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மீண்டும் பாதிப்பு!

## பல இடங்களில் போக்குவரத்து துண்டிப்பு; விவசாயிகள் பெருங் கவலை!

(விசுவமடு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மீண்டும் இடைவிடாது பெருமழை பெய்துவருகின்றது.

இரணைமடுக்குளம், கல்மடுக் குளம், விசுவமடுக்குளம், ஆகியவை நிரம்பிவழிந்து கொண்டிருக்கின்றன. இரணைமடுக் குளத்தினை பாதுகாக்கும் நோக்குடன் அதன் சுயமாக இயங்கும் கதவுகள் திறந்துவிடப் பட்டிருக்கின்றன இதனால் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் வெலிக்கண்டல் சந்தியி இருந்து தர்மபுரம் வரையும் உள்ள சுமார் 4 மைல் தூரம் வரையும் வீதியின் மேலாக ஐந்தரை அடி வெள்ளம் பாய்ந்துகொண்டிருக்கிறது.

முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை கல்மடு, விசுவமடு ஆகிய பகுதி விவசாயிகள் முன்னைய அழிவில் இருந்து எஞ்சிய பகுதி நெல்லை அறுவடை செய்து வயல்களில் வைத்துவரும் வேளையில் மீண்டும் வெள்ளம்வடிவதினால் மடி நெல்கூட காப்பாற்றமுடியாதுள்ளது என்று பெருங்கவலை கொண்டுள்ளனர்.

விசுவமடு விவசாயிகள் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மிளகாய்க்கன்றுகளைபயிரிட்டு பழுக்கும் நிலையில் கன்றுகள் பெருமழையில் அழிந்துள்ளதை யிட்டு பெரும் கவலையடைந்துள்ளார்கள்.

உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முத்தையன்கட்டு, முள்ளியவளை, கற்சிலைமடு ஆகிய பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இப்பகுதிகளுக்கு சென்றவாரம் தான் முன்னைய வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட தற்காக வெள்ள நிவாரணம் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டது.

கல்மடுக்குளத்தின் நீர்கட்டு மீறிபாய்ந்து கொண்டிருப்பதால் தர்மபுரம் பகுதியில் சுமார் 600குடும்பங்களின் வீடுகள் மீண்டும் வெள்ளத்தில் மிதக்கின்றன. பல கிராமங்களில் உணவுத் தேவையைக் கூட பூர்த்திசெய்யமுடியாது போக்குவரத்துகள் துண்டிக்கப் பட்டுள்ளன

---

## மரண அறிவித்தல்

### அந்திரேசு செபமாலை

இளமருதங்குளம் முன்னாள் கி ச உறுப்பினரும், வட்டவிதானையுமான திரு. அ செபமாலை 29-2-84ல் காலமாகிவிட்டார். அன்னார் ஞானம்மாவின் (பொன்னு) அன்புக்கணவரும், அந்திரேசு, டானியல் (உப அதிபர் / தொண்டைமானாறு ம.வி ஆசிரிய ஆலோசகர்), பாலசிங்கம், ஞானமுத்து, லூர்துமேரி, அழகக்கோன், அடைக்கலம் [சிங்கப்பூர்], யோகம்மா யோசேப்பு, மதுரநாயகம் புனிதசிலி ஆகியோரின் தகப்பனாரும், மருமலின் தம்பிராசா), யோகநாதன் ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று 2-3-84 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இளமருதங்குளம் சேமக்காலையில் நடைபெறும்.

இளமருதங்குளம்,
வவு/சேமமடுக்குளம். 1101

---

## மரண அறிவித்தல்

### திருமதி யோகாம்பிகை கணபதிப்பிள்ளை

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த யோகாம்பிகை காலமாகிவிட்டார். இவர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், Dr. முருகானந்தன் (வெரவபணத்தற), உமாதேவி, நித்தியானந்தன் (லண்டன்), பதுமநாதன் (பதி கொன்ஸ்ரக்சன்ஸ்) ஆகியோரின் தாயாரும், வசந்தா, T. ராஜசேகரம் [லண்டன் லிமிட்), குமுதினி லண்டன்), சந்திரதிலகம் [B C C] ஆகியோரின் மாமியாரும், சுபாங்கினி, சுபாகரன், தீபா, சுதர்சினி, ரஜீவன், சசி, திவாகர், சுசி, கல்யாணி, நிஷாந்தன் ஆகியோரின் பேத்தியுமாவார். பூதவுடல் தகனக்கிரியைக்காக 6-ம் கட்டை, கட்டுடை, மானிப்பாயிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நாளை சனிக்கிழமை (3-3-84) பிற்பகல் 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 1112

---

## மரண அறிவித்தல்

### வே. தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை

தாவடிச் சந்தி பிரபல வர்த்தகர் வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை காலமானார் அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், விஜயலட்சுமி, தர்மலட்சுமி, கிருபானந்தன் (ஜனவசம - அட்டன்) கமலாதேவி, பரிமளகாந்தி, அருளானந்தன் (சுவிற்சலாந்து), நடேசானந்தன் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புத்தந்தையும், திலகராசா கச்சேரி-யாழ்ப்பாணம்), புண்ணியலிங்கம் (ஆசிரியர் இந்துக்கல்லூரி-யாழ்ப்பாணம்), வசந்தகுமார் இன்ரகொன்ரினென்றல் ஓட்டல் - கொழும்பு), புனிமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வே. தங்கத்துரை, வே. த. ஆறுமுகம், திருமதி பொன்னம்பலம் சின்னம்மா, திருமதி பொன்னுத்துரை இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆறுமுகத்தின் மைத்துனருமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 3-3-84ம் திகதி சனிக்கிழமை பகல் 10 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெறும்.

திருமதி பொன்னுத்துரையும்
குடும்பத்தினரும்

1114

---

## இடமாற்றத்துக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். அரசாங்க அதிபர் இடமாற்றத்தை ஆட்சேபிக்க வேண்டும் என்றும் ரத்துச் செய்யுமாறு கோரவேண்டும் என்றும் கூறும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடம் விரைவாக அமைக்கப்பட வேண்டுமென்று கோரும் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

இக் கூட்டத்தில் சர்வகட்சி மகாநாட்டில் ஏனைய அரசியல் கட்சிகள், பொதுஸ்தாபனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகள் அறிக்கைகள் என்பன அலசி ஆராயப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

பண்டிதர் கா. பொ இரத்தினம் முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட சபைத் தலைவர்களான திரு. சு. நடராசா திரு. ந. இராசேந்திரம் முன்னாள் மாநகர மேயர்களான திரு. இ. விசுவநாதன் திரு சி நாகராசா ஆகியோருடன் மற்றும் பல உறுப்பினர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா இடமாற்றம் செய்யப்படுவதை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு சிவசிதம்பரம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு தந்தி ஒன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

### ஜனாதிபதிக்கு தந்தி

திரு தேவநேசன் நேசையாவின் இடமாற்றத்தை ரத்து செய்து தொடர்ந்து யாழ்ப்பாணத்திலேயே கடமையாற்ற அனுமதி வழங்கும்படி கோரி இந்த அவசரத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் திரு. சி வ. வரதராசா, அரசாங்க பொறுத்தாதியர் சங்கத் தலைவர் திரு என். மயில்வாகனம் மற்றும் சமூகசேவை ஸ்தாபனங்கள் ஆகியோரும் ஜனாதிபதிக்கு தந்திகள் அனுப்பி வைத்துள்ளனர். (ஊா]

---

## உரும்பராய் கொலைவழக்கு இன்று தொடர்ந்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கொலை வழக்கு யாழ். நீதவான் எஸ். நாகராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. மேல் விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறும். இவ்வழக்கில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த செல்வன் நடேசன் அல்லது தாவடியான் அதே ஊரைச்சேர்ந்த ஞானமுத்து திருச்செல்வம் என்பவரை கொலை செய்ததாக கொலைக்குற்றம் சாட்டப் பட்டுள்ளார்.

வழக்காளி தரப்பில் சுன்னாகம் பொலிசாரின் உதவியுடன் சட்டத்தரணி ஆர் தவராஜா ஆஜரானார். எதிரி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி சபாரட்ணம் சட்டத்தரணி ரி. லிங்கராஜாவின் உதவியுடன் ஆஜரானார் இதுவரை சாட்சிகள் தி. செல்வராஜா, கி. புஷ்பராஜா, ஏ பொன்னுராஜா, க. நடராஜா, க நல்லையா ஆகியோர் சாட்சியமளித்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர் இன்னும் 6 சாட்சிகள் விசாரணை செய்யப்படவுள்ளனர்.

---

## சமூகவிரோதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ழீழ விடுதலைப் புலிகள்' என்ற பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

''அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழ் மக்களின்பரந்து பட்ட ஆதரவுடன் நாம் செயற் பட்டுவரும் இவ்வேளையில் எம் மக்களிடையே கொள்ளையடித்தும், வழிப்பறி செய்தும் கப்பம் வாங்கியும் இயக்கத்தின் பெயரைச் சொல்லிப் பணம் சேகரித்துவரும் சமூகவிரோதக் கும்பல்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு களங்கம் விளைவிக்கின்றன. விடுதலைப் போராளிகளை காட்டிக்கொடுப்பவர்போல இச் சமூகவிரோத செயல்களைச் செய்யும் சமூக விரோதக் கும்பல்களும் துரோகிகளே. ஆயுதப் படையினரின் கொடுமைகளால் நொந்து போயிருக்கும் எம் மக்களை ''வெந்த புண்ணிலே வேல்பாய்ச்சுதல்'' போல மேலும் நோகவைக்கும் விதத்தில் இச்சமூக விரோதக் கும்பல்கள் செயற்பட்டுவருகின்றன இச்சமூக விரோதிகளினது அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது இவர்களை அழித்தொழிப்பதற்கு மக்கள் எமக்குப் பக்கபலமாக அமைவர் என்பது திண்ணம் சிறீலங்கா நிர்வாகத்திற்கான சகல தேர்தல்களையும் முற்றுமுழுதாக நிராகரித்து நடைமுறையனுபவங்களினூடாக சரியான பாதையில் பிரபாகரன் தலைமையில் நாம் தொடர்ந்தும் முன்னேறுவோம் ''அரசியற் குழுதமிழீழ விடுதலைப்புலிகள்' என்று பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரசுரங்கள் நேற்றுமுன் தினம் இருநபர்களின் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களின் போதும் அதுநடைபெற்ற இடங்களில் போடப் பட்டிருந்தது. [மா]

---

## கொள்ளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் புலன்விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் திரு பியசேன இது தொடர்பான புலன் விசாரணைக்குப் பொறுப்பாகவுள்ளார்.

காத்தான்குடி மக்கள்வங்கியில்கடந்தஜனவரி மாதம் 13ம் திகதி ஆயுதம் தாங்கிய 25இளைஞர்கள் 350 லட்சம் ரூபா(மூன்றரை கோடிரூபா) பெறுமதியானதங்க நகைகளையும் இரண்டு லட்சத்து 40 ரூபா ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்திருந்தது தெரிந்ததே

இலங்கையின் பொலிஸ் வரலாற்றிலேயே மாபெரும் கொள்ளை, காத்தான்குடி மக்கள் வங்கிக்கொள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

---

## இன்று மரண...,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்ஸ்பெக்டர் முத்துத்தம்பி தலைமையிலான பொலிசார் சடலத்தைப் பொறுப்பேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

கல்வியன்காடு கொண்டலடியைச் சேர்ந்த செல்லக்கிளி நேற்றுக்காலை தமது நண்பரான அரியாலை திருமகள் வீதியைச் சேர்ந்த அன்ரனி அருமைநாயகத்துடன் கொக்குவிலுக்குச் சென்றதாகவும், 11 மணியளவில் பலாலைக்கழகச் சந்தியில் உள்ள தேநீர்க்கடையில் தேநீர் அருந்திவிட்டு நண்பரிடம் சைக்கிளை எடுத்து வரும்படி சொல்லி வீதிக்கு வந்ததும் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரு நபர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இறந்தவர் மனைவி நாகராணி (27 வயது) என்பவரும், நண்பர் அன்ரனி அருமைநாயகமும் பொலிசாருக்கு சாட்சியமளித்துள்ளனர்.

இன்று இறந்தவரின் பிரேத பரிசோதனையும், மரண விசாரணையும் நடைபெறவுள்ளது. (மா)

---

## நாட்டின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பில் நேற்று மழைபெய்யவில்லை. ஆனால் இங்கு திரும்பவும் கடும்மழை பெய்யக்கூடிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

அநுராதபுரத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்தகடும் மழையினால் போக்குவரத்துகள் ஸ்தம்பிக்கப்பட்டுள்ளன. ஹொரவப்பொத்தான - வவுனியா வீதியில் 5 அடி வெள்ளம் நிற்கிறது.

அநுராதபுரமாவட்டத்திலுள்ள பத்துக்குளங்கள் நீரினால் நிரம்பி வழிகின்றன. கந்தளாய், மொறவெவ குளங்களும் நீரினால் நிரம்பியுள்ளன.

அநுராதபுர மாவட்டத்தில் பெய்துவரும் கடும்மழையினால் வீடுகளை இழந்த மக்கள் பாடசாலைகளிலும், கோவில்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். [வெ]

---

## யாழ் சமூக..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். இன்னொருவரான திரு நித்தியானந்தன் புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திற்குச் சென்றுவிட்டார். கடைசியாக இருந்த திரு இராமநாதனும் நேற்று முதல் மன்னார் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது யாழ். மாவட்டத்தில் சமூகசேவை உத்தியோகத்தர் ஒருவர்கூட இல்லை. [ச]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu Telephone: 22389—24126